வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 05.12.2024 வியாழக்கிழமை இதழ் : 339 பக்கங்கள் : 12



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
இல.390. ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer மனிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

# புதிய அரசமைப்பு உருவாகும்போதே சமஷ்டி தீர்வு தொடர்பில் அவதானம்!

## தமிழரசு எம்.பிக்களிடம் எடுத்துரைத்தார் அநுர



கொழும்பு, டிசெம்பர் 05

சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வு குறித்து புதிய அரசமைப்பு உருவாக்கத்தின் போதே கவனத்தில் கொள்ளமுடியும் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க குறிப்பிட்டார் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்றக் குழுத் தலைவர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார். 11



## வடக்கில் ஒரு நீதி தெற்கில் ஒரு நீதி

கொழும்பு, டிசெ. 05

வடக்கில் ஒரு நீதியும் தெற்கில் ஒரு நீதியும் நடை முறைப்படுத்தப்படுவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் குரு நாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றம் சபாநாயகர் 11

## '13' ஒழிக்கப்படுமென நான் கூறவேயில்லை!

### பல்டி அடிக்கிறார் ரில்வின் சில்வா

கொழும்பு, டிசெம்பர் 05

புதிய அரசியலமைப்பியில் சிறந்த தீர்வு நடை முறைப்படுத்தப்படும் வரை 13ஆவது திருத்தச் சட்டம் நீக்கப்படாது. அது தொடர்பில் சகல தரப்பினருடனும் ஆக்கபூர்வமான கலந்துரையாடல் கள் நடத்தப்படும் என்றே நான் கூறினேன் என ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார். 11

## தமிழர் புலிகளை நினைவு கூருவதும் ஜே.வி.பி. நினைவு கூரல்களும் ஒன்றே!

### இரு தரப்பும் நியாயபூர்வமாக கோரிக்கைக்காக போராடினார்கள் என்கிறார் கஜேந்திரகுமார் எம்.பி.



கொழும்பு, டிசெ. 05

யுத்தத்தின்போது உயிரிழந்த தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர் களையும் தங்கள் உயிர்களை இழந்த தமிழர்களையும் நினைவு கூருவதும் ஜே.வி.பியின் நினைவு கூரல்களும் ஒரே மாதிரியானவை. வித்தியாசங்கள் இருக்க முடியாது என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நேற்று பாரா ளுமன்றத்தில் தெரிவித்தார். 11

## தமிழ் அரசியல் கைதிகளை அரசு விடுவிக்க வேண்டும்!

### சாணக்கியன் எம்.பி. கோரிக்கை

கொழும்பு, டிசெ. 05

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இலங்கை தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஜனாதிபதியின் அக்கிராசன உரை மீது பாராளுமன்றில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

தொடர்ந்தும் உரையாற்றிய அவர் - 11

## மதுபான அனுமதிப் பத்திர பட்டியல் நேற்று வெளியீடு!

### பெயர்கள் எதுவும் வெளியாகவில்லை

கொழும்பு, டிசெ. 05

புதிதாக மதுபானச்சாலைகளுக்கு அனுமதி வழங்கப்பட்ட எண்ணிக்கை பட்டியலை அரசு நேற்று வெளியிட்டது.

புதிதாக மதுபானச்சாலைக்கான அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொண்டவர்களின் பட்டியல் வெளிப்படுத்தப்படவேண்டும் என பாரா ளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் வலியுறுத்தியிருந்தார்,

அதற்கமைய, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் அரசியல் இலஞ்சமாக 362 11

## உக்ரைனில் சண்டையிடும் வடமாகாண இளைஞர்கள்!

### அவதானம் செலுத்திய வெளிவிவகார அமைச்சு

கொழும்பு, டிசெ. 05

ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்ல முற்பட்டு உக்ரைன் - ரஷ்யா போரில் பங்கேற்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள வடக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் உள்ளிட்ட இலங்கையர்கள் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

வெளிவிவகார மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பிரதி அமைச்சர் அருண் ஹேமசந்திரா இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

அவ்வாறு சென்றவர்கள் கூலிப்படை யிலேயே இணைக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளதாக அவர் தெரிவித்தார். 11

## திருடப்பட்ட சொத்துக்களை மீட்க விரைவில் 3 புதிய சட்டமூலங்கள்!

### நீதி அமைச்சர் அதிரடி அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 05

திருடப்பட்ட சொத்துக்களை மீட்பதற்காக அடுத்த காலாண்டில் 3 புதிய சட்டமூலங்கள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

நேற்று பாராளுமன்ற அமர்வில் உரையாற்றும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

குற்றச் சட்டமூலம், மீட்பு, புனர்வாழ்வு மற்றும் திவால் சட்டமூலம், கணக்காய்வு சட்டமூலம் ஆகியவற்றுக்கான திருத்தங்கள் இவ்வாறு சமர்ப்பிக்கப்படும் என அமைச்சர் மேலும் கூறினார்.

(அ)

## ராஜபக்ஷ காலத்தில் நடந்த குற்றங்கள் சி.ஐ.டியிலிருந்து மாயமான கோப்புகள்!

கொழும்பு, டிசெ. 05

ராஜபக்ஷ காலத்தில் இடம்பெற்ற குற்றச்செயல்கள் தொடர்பான பல கோப்புகள் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் இருந்து காணாமல் போயுள்ளதாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன.

ஊடகவியலாளர் போத்தல ஜயந்த கடத்தப்பட்டமை மற்றும் அவரது மனிதாபிமான மற்ற சித்திரவதை மற்றும் பலத்த காயங்கள் தொடர்பான விசாரணை தொடர்பான பல முக்கிய ஆவணங்கள் காணாமல்போயுள்ளதாக போத்தல ஜயந்த தெரிவித்துள்ளார்.

தமக்கெதிரான குற்றம் தொடர்பில் தற்போது 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருச்சி சிறப்பு முகாமில் உள்ள இரு மீனவரை அழைத்து வருக!

## அரசிடம் அனலைதீவு உறவுகள் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 05

தமிழ்நாடு, திருச்சி சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அனலைத்தீவு கடற்றொழிலாளர்களை இலங்கைக்கு அழைத்துவருவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என உறவினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த ஜூன் மாதம் 10ஆம் திகதி அனலைதீவுப் பகுதியில் இருந்து கடற்தொழிலுக்கு படகொன்றில் சென்ற இரண்டு கடற்றொழிலாளர்களும், கடற் சீற்றம் காரணமாக தமிழக கடற்பரப்பினுள் தத்தளித்த நிலையில் , தமிழக கடற்றொழிலாளர்களால் மீட்கப்பட்டு தமிழக கடலோர காவல் படையினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

அவர்கள் இருவரும் விசாரணைகளின் பின்னர் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கடந்த 30 ஆம் திகதி நீதிமன் றால் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

எனவே இருவரையும் இலங்கைக்கு அழைத்து வருவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என அவர்களது உறவினர்கள் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)



# பலாலி இராஜேஸ்வரி அம்மன் ஆலயத்தில் ஆளுநர் வழிபாடு

யாழ்ப்பாணம், டிசெ. 05

பலாலியில் மக்கள் வழிபாட்டுக்கு அண்மையில் அனுமதிக்கப்பட்ட ஸ்ரீஇராஜேஸ்வரி அம்மன் ஆலயத்தில் நேற்று புதன் கிழமை இடம்பெற்ற வழிபாடுகளில் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனும், யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சந்தன விக்கிரமசிங்கவும் பங்கேற்றனர். இதன்போது ஆலய நிர்வாகத்தினராலும், ஆலயக் குருக்களாலும் வடக்கு மாகாண ஆளுநர் மற்றும் யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி ஆகியோர் மதிப்பளிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் யாழ். மாவட்டச் செயலக மேலதிக மாவட்டச் செயலர் க.சிறிமோகனன், கிராம அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

யாழ். மாவட்ட கட்டளைத் தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் சந்தன விக்கிரமசிங்க நேற்றுடன் இலங்கை இராணுவ தொண்டர் படையின் தளபதியாக பதவி உயர்வு பெற்றுச் செல்கின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் சிறப்பாக இடம்பெற்றது ஒளி விழா

யாழ்ப்பாணம், டிசெ. 05

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை கிறிஸ்தவ மன்றம் நடத்திய ஒளி விழா கலாசாலை அதிபர் ச.லலீசன் தலைமையில் நேற்று புதன் காலை இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சனும் சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி கிறிஸ்தவ பாட விரிவுரையாளர் அ. ஜேம்ஸ் மெய்ஷானும் கௌரவ விருந்தினராக யாழ். மறை மாவட்ட மறைக்கல்வி நடுநிலைய இயக்குநர் அருட்பணி டியூக் வின்சென்ட் அடிகளாரும் விசேட விருந்தினராக கலாசாலையின் ஓய்வு நிலை விரிவுரையாளர் வ.சி. குணசீலனும் கலந்து கொண்டனர் .

நிகழ்வின் ஆரம்பத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. யாழ் ஆயர் இல்ல மறை





அலை ஊடக இணைப்பாளர் அருட்பணி அ.அன்ரன் ஸ்ரிபன் திருப்பலியை ஒப்புக் கொடுத்தார். கிறிஸ்தவ மன்றக் காப்பாளர் பிரபாலினி தனம் வாழ்த்துரை வழங்கினார்.

நிகழ்வில் ஒளி விழா போட்டிகள் தொடர்பான பரிசளிப்பு மற்றும் ஆசிரிய மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள் என்பன இடம் பெற்றன. (அ)

# துவரையாற்றை அண்டிய பகுதிகளில் 600 ஏக்கர் வயல்கள் நாசமாகின!



கிளிநொச்சி, டிசெ. 05

கிளிநொச்சி - புளியம்பொக்கணை கமநல சேவை நிலையத்திற்குற்பட்ட துவரையாற்றை அண்டிய பகுதிகளிலுள்ள பல ஏக்கர் வயல் நிலங்கள் வெள்ள அனர்த்தத்தினால் அழிவடைந்துள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

சுமார் 600 இற்கும் மேற்பட்ட ஏக்கர் வயல் நிலங்கள் அழிவடைந்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

இரணைமடுக்குளத்தின் வான் நீர் பாய்ந்தமையினாலேயே குறித்த அழிவு இடம்பெற்றுள்ளதாகவும், இதனால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் கூறினர்.

கடனைப் பெற்று நெற்செய்கை மேற்கொண்ட நிலையில், தாம் கடனை எவ்வாறு செலுத்தப்போகிறோம் என தெரிவில்லை என அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

உரிய அதிகாரிகள் தமது வயல் நிலங்களை பார்வையிட்டு தமக்கு நட்ட ஈட்டை பெற்றுத்தர நடவடிக்கை எடுக்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

# மாற்றுத் திறனாளிகள் தினத்தின் சிறப்பு நிகழ்வு கிளிநொச்சியில்



கிளிநொச்சி,டிசெ. 05

பன்னாட்டு மாற்றுத் திறனாளிகள் தினத்தையொட்டி நேற்று முன்தினம் கிளிநொச்சி விவேகானந்த நகரிலுள்ள வன்னி விழிப்புலனற்றோர் சங்க மண்டபத்தில் சிறப்பு நிகழ்வென்று நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

சங்கத்தின் தலைவி திருமதி யசோதா ஸ்ரீகிருஷ்ணகுமார் தலைமையில நடைபெற்ற இந்நிகழ்வை செயலாளர் ஞானகுமார் நெறிப்படுத்தினார். இந்நிகழ்வில் முற்றாக விழிப்புலனை இழந்த மற்றும் செயல்படமுடியாத மாற்றுத் திறனாளிகள் 11 பேருக்கு இரண்டாம் கட்டமாக தலா 5 லட்சம் ரூபா நிரந்தர வைப்பிலிடப்பட்டது.

இவ்வாறான 38 பேருக்கு தலா 15 லட்சம் ரூபா நிரந்தர வைப்பிலிடுவதே இலக்காக உள்ளது. உறவினர்களுக்கோ, அயலவர்களுக்கோ சிரமம் ஏற்படாத வகையில் நிரந்தர வருமானம் கிடைக்கும் நோக்குடன் இந்த நிரந்தர வைப்பு மேற்கொள்ளப்படுகிறது. இன்றைய நிகழ்வு மூலம் இரண்டாம் கட்டம் நிறைவு பெறுகிறது.

இச்சங்கத்தில் மட்டக்களப்பைச் சேர்ந்த ஏழுபேர் உட்பட 278 பேர் பயனாளிகளாக உள்ளனர். 63 பேர் வாழ்வாதார உதவிகளைப் பெற்றுள்ளனர். உறவினர் தயவில்லாத 15 பேர் இங்குள்ள விடுதியில் தங்கியிருந்து வருகின்றனர். 172 மாணவர்கள் இந்நிறுவனத்தின் உதவியுடன் கல்வி கற்று வருகின்றனர். இப்பணிமனை அமைந்துள்ள வளாகத்தில் மெழுகுதிரி உருவாக்கம், கணனிப் பயிற்சிநெறி, தேங்காயெண்ணைய் உற்பத்தி செய்தல் என்பன நடைபெறுகின்றன. உறவினர்கள் அல்லாத 15 பேர் விடுதியில் தங்கியுள்ளனர்.

இந்நிகழ்வில் வங்கி மேலாளர், பிரான்ஸிலிருந்து வருகை தந்த சமூக செயற்பாட்டாளர் உட்பட பலரும் வைப்புப் பத்திரங்களை வழங்கினர். இறுதியாக நிகழ்ந்த உணவ உபசரிப்பு நிகழ்வை ஜேர்மனியைச் சேர்ந்த ஒரு குடும்பத்தினர் பெறுப்பேற்றனர். (அ)

# உயரம் குறைந்த படிகளையுடைய பஸ்களை சேவையில் ஈடுபடுத்துக

## மாற்றுத்திறனாளிகளின் நன்மைகருதி ஆளுநரிடம் பேராசிரியர் ரகுராம் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 05

மாற்றுத்திறனாளிகள் பேருந்துகளில் ஏறுவதற்கு பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். எனவே, உயரம் குறைந்த படிகளையுடைய பேருந்துகளை ஒரு சில வழித்தடங்களிலாவது சேவையில் ஈடுபடுத்த வடக்கு ஆளுநர் நடவடிக்கை எடுக்க வேண்டும் - இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட பீடாதிபதி, பேராசிரியர் சி. ரகுராம் கோரிக்கை விடுத்துள்ளார்.

சர்வதேச மாற்றாற்றலுடையோர் தினமும் புதுப்பிரவாகம் நூல் வெளியீடும் யாழ்ப்பாணம் பிரதேச செயலக திறந்தவெளி அரங்கில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய பேராசிரியர் ரகுராம் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதைய வடக்கு மாகாண ஆளுநர்



வேதநாயகன், சமூகத்தின் நாடித்துடிப்பை அறிந்த ஒருவர். ஒடுக்கப்படும் சமூகத்தின் குரலாக அவர்களின் கரிசனையின்பால் அக்கறை கொண்ட ஒருவராக அறியப்பட்டவர். மாற்றுத்திறனாளிகள் தொடர்பில் முன்வைக்கப்படும் கோரிக்கைகளை ஆளுநர் நிச்சயம் நிறைவேற்றித் தருவார் என நம்புகின்றேன்- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
05.12.2024 வியாழக்கிழமை
பிலவ வருடம், கார்த்திகை 20

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# கனவிலிருந்து விடுபடுதல்

இலங்கை தமிழ் அரசு கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிவ ஞானம் சிறீதரன், தமிழ் மக்களுக்கான சுயநிர்ணய உரிமையை அங்கீகரித் தால், தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துடன் இணைந்து செயல்பட தயாராக இருப்பதாகத் தெரிவித்திருக்கின்றார். தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் எவரை யும் இணைந்து செயல்பட வருமாறு அழைப்பு விடுக்கும் நிலையில் இல்லை. தமிழர்களின் தயவின்றி அவர்களால் ஆட்சியை கொண்டுசெல்ல முடியாதென் னும் நிலைமையை தமிழர்களால் ஏற்படுத்த முடிந்தால் மட்டும்தான், அவர் கள் தமிழ் அரசு கட்சியின் பக்கம் திரும்புவார்கள். அவ்வாறான ஆற்றல் தமிழ் அரசு கட்சியிடம் இருக்கின்றதா?

தமிழ் அரசு கட்சி, கடந்த பொதுத் தேர்தலில் வடக்கில் தோல்வியுற்றிருக்கின் றது - இந்த நிலையில் எதற்காக அநுர அரசாங்கம் தமிழ் அரசு கட்சியை நாட வேண்டும்? தேசிய மக்கள் சக்தியின் உண்மையான முகமான ஜனதா விமுக்தி பெரமுனவின் வரலாற்றை உற்றுநோக்க வேண்டும். ஜே.வி.பி. தொடர்பான, ஈழநாட்டின் முன்னைய ஆசிரியர் தலையங்கங்களை தமிழ் அரசியல்வாதிகள் கவனத்துடன் படிக்க வேண்டும். தமிழ் அரசியல்வாதிகள் விடயங்களை ஆழ மாக படிக்காமைதான் அவர்களது அடிப்படையான பிரச்னையாகும்.

முதலில் தமிழ் அரசியல்வாதிகள் தாங்கள் எதனை உடனடியாக எதிர் பார்க்கின்றனர் - அதனை அடைவதற்கு தங்களால் என்ன செய்ய முடியும்? என்பன பற்றியே சிந்திக்க வேண்டும். அவ்வாறில்லாது வழக்கமான சொற்க ளுடன் மல்லுக்கட்டிக் கொண்டிருந்தால் நிலைமைகள் மேலும் மோசமடையுமே தவிர, அரசியலில் முன்னோக்கிப் பயணிப்பதற்கான அனைத்து வாய்ப்புகளும் கைநழுவிவிடும்.

ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா மாகாண சபை தொடர்பில் வெளிப்படுத்திய கருத்துக்கள் தொடர்பில், தமிழ் அரசியல்வாதிகள் நெஞ்சில் அடித்துக் கொண்டனர் - மாகாண சபை முறைமையை இல்லாமலாக்கப் போகின்றீர்களா - அது எப்படி முடியும் - இது எதேச்சாதிகாரம் என்றெல்லாம் கருத்துகள் முன்வைக்கப்பட்டன. ஆனால், இதே அரசியல்வாதிகள் மாகாண சபையை உருப்படியாக பயன்படுத்துவதற்கு இதுவரையில் முயற்சித்திருக் கின்றார்களா?

வடக்கு மாகாண சபை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் இருந்தது - அதனைக் கொண்டு செய்யக் கூடிய விடயங்களை கூட்டமைப்பு முன்னெடுத் ததா? விக்னேஸ்வரன் முதலமைச்சராக இருந்தபோது, விடயங்களை ஆக்க பூர்வமாக கையாண்டிருந்தால், தமிழர்களால் மாகாண சபையை எந்தளவு தூரம் வினைத்திறனுடன் கையாள முடியும் என்பதை காண்பித்திருக்க முடியும் - ஆனால் நடந்தது என்ன? இனப்படுகொலைத் தீர்மானம் கொண்டுவரு வது யாரென்னும் போட்டியில் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் ஈடுபட்டனர். அதனைக் கொண்டுவந்ததால் என்ன நடந்தது - அதனையாவது முன்கொண்டு செல்லும் அரசியலையாவது தமிழ்த் தேசியம் பேசிய கட்சிகளால் முன்னெடுக்க முடிந்ததா?

வடக்கு மாகாண சபையை தங்களின் கட்சிச் சண்டைகளுக்கான கள மாகவே கூட்டமைப்பு - முக்கியமாக தமிழ் அரசு கட்சி பயன்படுத்தியது. இறுதி யில் தாங்கள் கொண்டு வந்த முதலமைச்சருக்கு எதிராக இரவோடு இரவாக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்தனர். மாகாண சபையில் ஆளு நரின் தலையீடுகளை இல்லாமலாக்க வேண்டும் என்று கூறிய கட்சியே, தங்களுடைய முதலமைச்சருக்கு எதிராக ஆளுநரிடம் சென்றது.

தமிழ் அரசியல்வாதிகள் தங்களின் கடந்த காலத்திலிருந்து கொஞ்சமாவது கற்றுக்கொள்ள முயற்சிக்க வேண்டும். இல்லாவிட்டால், தமிழ் மக்கள், தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகளிலிருந்து விடைபெற்றுக் கொள்வார்கள். இம்முறை வடக்கு மாகாணத்தில் இடம்பெற்றது போன்ற நிலைமையே தொடரும். சுய நிர்ணய உரிமையின் அடிப்படையிலான அரசியல் தீர்வு என்பது ஒரு பகல் கனவு. தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அல்ல - எந்தவொரு தென்னிலங்கை அரசாங்கமும் அதனை உச்சரிக்காது. அதேபோன்று, சுயநிர்ணயத்திற்கு வெளித்தரப்புக்களின் ஆதரவு - முக்கியமாக இந்தியாவின் ஆதரவு எக் காலத்திலும் கிடைக்காது. இதனையும் தாண்டி, சுயநிர்ணயத்தை அடைய வேண்டுமாயின், ஆயுதப் போராட்டம் ஒன்றைத்தான் தமிழ் அரசு கட்சி முன் னெடுக்க வேண்டும் - ஆனால், ஆயுதப் போராட்டத்தை உச்சளவில் முன் னெடுத்த விடுதலைப் புலிகள் அமைப்புக் கூட, பேச்சுவார்த்தைக்கு செல்கின்ற போது, உள்ளக சுயநிர்ணயம் என்றுதான் உச்சரித்தது. இப்போதுள்ள நிலை யில் அதனைக் கூட உச்சரிக்கும் நிலையில் தமிழர்கள் இல்லை.

வெளிநாட்டுக்கு அனுப்புவதாக நிதி மோசடி

## மொட்டுக்கட்சி யாழ். அமைப்பாளரை விசாரணைக்கு அழைத்த பொலிஸார்

யாழ்ப்பாணம், டிசெ. 05

சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் யாழ்ப்பாணம் மாவட்ட அமைப்பாளர் கீதநாத் காசிலிங்கம், நேற்றையதினம் நிதி மோசடி தொடர்பான விசாரணைகளுக்காக மானிப்பாய் பொலிஸ் நிலையத்துக்கு அழைக்கப்பட்டார்.



அந்தக் கட்சியின் உறுப்பினராக இருந்த ஒருவர், நாமல் ராஜபக்ஷவின் பெயரை பயன்படுத்தி, பல இலட்சம் ரூபாய் நிதி மோசடி செய்துள்ளார். வெளிநாட்டுக்கு அனுப்புவதாக கூறியே அவர் நிதி மோசடியில் ஈடுபட்டுள்ளார் என்று பொலிஸார் கூறினர்.

இந்த நிலையில், கீதநாத் காசிலிங்கம் யாழ்ப்பாணம் மாவட்ட அமைப்பாளர் என்ற ரீதியில் விசாரணைகளுக்காக அழைக்கப்பட்டுள்ளார்.

குறித்த நபர் நிதி மோசடியில் ஈடுபட்டமை உறுதி செய்யப்பட்டால் அவரை கட்சியிலிருந்து நீக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று கீதநாத் தெரிவித்தார். (எ-05)

## யாழ்ப்பாணம் குருநகர் கடலில் 183 கிலோ கேரளக் கஞ்சா மீட்பு

யாழ்ப்பாணம், டிசெ. 05

யாழ்ப்பாணம் குருநகர் கடற்பரப்பில் வைத்து 183 கிலோ கேரளக் கஞ்சாவுடன் டிங்கி படகு ஒன்றும் மீட்கப் பட்டது.



கடற்படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இந்த மீட்பு நடவடிக்கை நேற்று அதிகாலை 3. 30 மணியளவில் முன்னெடுக்கப்பட்டது. இருப்பினும் சந்தேகநபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை.

92 பொதிகள் இவ்வாறு மீட்கப்பட்டன. மீட்கப்பட்ட படகு மற்றும் கஞ்சா பொதிகள் என்பன யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டன.

இது தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

## 'அரங்க வலைகள்' நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், டிசெ. 05

'கலைமுகம்' இதழில் தை - பங்குனி 1994 , இதழ் 11 முதல் ஆடி - மார்கழி 1999, இதழ் 30 வரையிலான 20 இதழ்களில் நீ. மரிய சேவியர் அடிகளார் ,மேற்புலத்தில் நிலவிய நவவேட்கைவாத மற்றும் மாற்றரங்குகள் பற்றி 'அரங்க வலைகள்' என்னும் பெயரில் தொடராக எழுதிய கட்டுரைகள் நூலாகத் தொகுக்கப்பட்டு குமரன் புத்தக இல்ல வெளியீடாக வெளிவருகின்றது.


இந்த நூலின் வெளியீட்டு விழா நாளை மறுதினம் 7ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணிக்கு இலக்கம் 286, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது.

யோ. யோண்சன் ராஜ்குமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக ஆங்கில மொழி கற்பித்தல் துறையின் பேராசிரியர் கலாநிதி கந்தையா சிறீகணேசன் கலந்துகொள்ளவுள்ளார்.

நிகழ்வில் வெளியீட்டுரையை கி. செல்மர் எமில் ஆற்றுவார். மதிப்பீட்டுரைகளை பா. அகிலன், சி. ரமேஷ், நா. நவராஜ் ஆகியோர் வழங்குவார்கள்.

இக்கட்டுரைகள் கலைமுகத்தில் தொடராக வெளிவந்த காலத்தில் மிகுந்த வரவேற்பைப் பெற்றிருந்தமையும் பலராலும் ஆவலுடன் வாசிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (எ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். பழைய பிரச்னைகளுக்கு மாறுபட்ட அணுகுமுறையால் தீர்வு காண்பீர்கள். புதியவரின் நட்பால் உற்சாகமடைவீர்கள். திடீர் திருப்பம் நிறைந்த நாள்.

**இடபம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் உங்களை அறியாமலேயே தாழ்வு மனப்பான்மை வந்து செல்லும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை குறையும். சகிப்புத் தன்மை தேவைப்படும் நாள்.

**மிதுனம்**
மூத்த சகோதர வகையில் உதவிகள் உண்டு. விலை உயர்ந்த பொருட்கள் வாங்குவீர்கள். மனைவி வழியில் உறவினர்கள் மதிப்பார்கள். எதிர்பாராத நன்மைகள் உண்டாகும் நாள்.

**கடகம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளை புரிந்துக் கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள். செல்வாக்கு கூடும்.

**சிம்மம்**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். அக்கம்-பக்கம் வீட்டாரின் அன்பு தொல்லை குறையும். வேற்றுமதத்தவர்கள் நண்பர்கள்ஆவார்கள். கனவு நனவாகும் நாள்.

**கன்னி**
எதிர்ப்புகள் அடங்கும். பழைய கடனில் ஒரு பகுதியை பைசல் செய்வீர்கள். பயணங்களால் அலைச்சல் இருந்தாலும் ஆதாயமும் உண்டு. தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**துலாம்**
குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். சொத்துப் பிரச்சினைக்கு நல்ல தீர்வு கிடைக்கும். புது வாகனம் வாங்குவீர்கள். உறவினர்கள் வீடு தேடி வருவார்கள்.

**விருச்சிகம்**
கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் அதிகரிக்கும். அழகும் இளமையும் கூடும். கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். உறவினர் நண்பர்கள் உங்களுக்கு முக்கியத்துவம் தருவார்கள்.

**தனுசு**
ஒரே நாளில் முக் கியமான நான்கைந்து வேலைகளை பார்க்க வேண்டி வரும். நீங்கள் நகைச்சுவைக்காக சொல்ல கூடிய கருத்துக்கள் கூட சீரியசாக வாய்ப்பு இருக்கிறது.

**மகரம்**
விவாதங்களை தவிர்ப்பது நல்லது. குடும்பத்தைப் பற்றிய கவலைகள் வந்து நீங்கும். திடீர் பயணங்கள் செலவுகளால் திணறுவீர்கள். லாபம் சுமாராக இருக்கும். அலைச்சலுடன் ஆதாயம் தரும் நாள்.

**கும்பம்**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். உடன்பிறந்தவர்கள் பாசமழை பொழிவார்கள். நெடுநாட்களாக நீங்கள் பார்க்க நினைத்த ஒருவர் உத்தியோகத்தில் முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள்.

**மீனம்**
உணர்ச்சி வசப்பட்டு பேசுவதை விட்டு அறிவுப்பூர்வமாகப் செயல்படுவீர்கள். திடீர் முடிவுகள் எடுப்பீர்கள். உறவினர் நண்பர்கள் உங்களுக்கு முக்கியத்துவம் தருவார்கள். அலுவலகத்தில் மரியாதை கூடும். முயற்சிகள் பலிதமாகும் நாள்.

# சொந்தக் காலில் நிற்க வேண்டும் மாற்றுத்திறனாளிகளின் விருப்பம்

## வடமாகாண ஆளுநர் வேதநாயகன் பாராட்டு





யாழ்ப்பாணம், டிசெ. 05

மாற்றுத்திறனாளிகள் ஒரு போதும் நிவாரணம் தருமாறு எங்களை அணுகுவதில்லை. அவர்கள் தங்கள் சொந்தக் காலில் நிற்பதையே விரும்புகின்றார்கள். இதைச் சிறந்ததொரு முன்னுதாரணமாக நாங்கள் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தெரிவித்தார்.

சர்வதேச மாற்றாற்றலுடையோர் தினமும் புதுப்பிரவாகம் நூல் வெளியீடும் யாழ்ப்பாணம் பிரதேச செயலக திறந்தவெளி அரங்கில் நடைபெற்றது.

பிரதேச செயலாளர் சா. சுதர்சன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக ஆளுநரும் சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக் கழக கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் சி. ரகுராமும் கலந்துகொண்டனர்.

ஆளுநர் இங்கு மேலும் தெரிவிக்கையில், மாற்றுத்திறனாளிகள் பலர் எங்களை வந்து சந்திப்பார்கள். அவர்களில் ஒருவர்கூட தமக்கு நிவாரணம் தேவை என்று கேட்டதில்லை. உடலில் எந்தக் குறைபாடுகளும் இல்லாதவர்கள் நிவாரணம் தேவை, அது தேவை, இது தேவை என்று நாடும்போது இவர்கள் அப்படி எங்களை நாடியதில்லை.

அவர்கள் தங்கள் சொந்தக் காலில் நின்று சாதிக்கவே விரும்புகின்றார்கள். அவர்களை நாங்கள் ஊக்கப்ப டுத்த வேண்டும். அவர்களிடம் கடின உழைப்பு இருக்கின்றது.

மாற்றாற்றல் உடையவர்கள் அரச அலுவலகங்களை அணுகும் வசதியை உறுதிப்படுத்தும் வகையில் நாங்கள் நடவடிக்கை எடுப்போம்- என்றார்.

(எ-05)

# சாவகச்சேரி கச்சாய் ஊர் எல்லையில் வெள்ளத்தை வெளியேற்ற நடவடிக்கை



யாழ்ப்பாணம், டிசெ. 05

சாவகச்சேரி நகர சபையின் எல்லைக்குட்பட்ட கச்சாய் ஊர் எல்லை பகுதியில் தேங்கி நின்ற வெள்ளத்தை வெளியேற்றும் நடவடிக்கை முன்னெடுக்கப் பட்டது.

குறித்த பகுதியிலுள்ள 523 ஆம் படையணி முகாமுக்கு அண்மையாக குடியிருக்கும் சுமார் 50 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு வந்த நிலையில் வெள்ள வடிகால் ஏற்படுத்தப் பட்டு கடலுக்குள் வெளியேற்றப் பட்டு வருகின்றது.

நகர சபையின் அனுமதியுடன் கடந்த மூன்று நாட்களாக பிரதேச இளைஞர்களின் பங்களிப்புடன் முன்னெடுக்கப் பட்ட இந்தச் செயல்பாடு காரணமாக வெள்ளம் குறைவடைந்து வருகின்றது. இதே வேளை, பிரதேச இளைஞர்களின் முன் மாதிரியான இந்தச் செயல் பாட்டுக்கு பலரும் பாராட்டு தெரிவித்து வருகின்றனர்.

(எ-05)

# வவுனியாவில் காட்டு யானை சிகிச்சை பலனின்றி மரணம்

வவுனியா, டிசெ. 05

வவுனியாவில் சுகவீனமடைந்த நிலையில் மீட்கப்பட்ட காட்டு யானை உயிரிழந்ததாக வவுனியா மாவட்ட வன ஜீவராசிகள் திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

வவுனியா குடாகச்சக்கொடி வயல்வெளியில் சுகவீனம் காரணமாக வீழ்ந்து கிடந்த யானை, வன ஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர்களால் மீட்கப் பட்டு ஐந்து நாட்களாக சிகிச்சை அளிக்கப்பட்டு வந்த நிலையிலேயே உயிரிழந்தது.

இதேவேளை, குறித்த யானையின் மரணம் தொடர்பான உடற்கூற்று பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது.

(எ-10)

# “அரசாங்க உயர் அதிகாரிகளின் சொத்து விவரங்களை ஆராய்க”

வவுனியா, டிசெ. 05

வவுனியா மாவட்டத்தில் பணியாற்றும் அரசாங்க உயர் அதிகாரிகளின் சொத்து விவரங்கள் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் ஆராயப்பட வேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இங்கு பணியாற்றும் உயர் அதிகாரிகள் பலர் திடீரென செல்வந்தர்களாக மாறியிருப்பதுடன் முகவர்களின் பெயர்களில் சொத்துகள் குவித்துள்ளனரா என்ற சந்தேகமும் மக்கள் மத்தியில் உருவாகி வருகின்றது.

அத்துடன் பிரதேச செயலகங்களில் மக்கள் தமது காணி தொடர்பான செயல்பாடுகளை மேற்கொள்வதில் பெரும் சிக்கல்களை எதிர்கொள்வதுடன் காலம் கடத்தி மக்களை அலைக்கழிப்பதாகவும் குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்பதுடன் புலம்பெயர் நாடுகளில் இருந்து வருபவர்கள் மிகவும் இலகுவில் ஒரிரு நாளில் தமது காணி விடயங்களை சீராக்க கூடியதாக உள்ளதையும் பொது மக்கள் வெளிப்படுத்தியுள்ளனர்.

இவ்வாறான சூழலில் தற்போதைய அரசாங்கம் ஊழலை ஒழிப்பதாக கூறிவரும் நிலையில் வவுனியாவில் பணியாற்றும் உயர் அதிகாரிகள் பணிக்கு இணையும் போது வழங்கிய சொத்து விவரங்களையும் தற்போது அவர்களின் சொத்துக்களையும் ஆராய வேண்டும் அரசாங்கத் திணைக்களங்களில் பொது மக்களிடம் இலஞ்சம் பெறல் மற்றும் மக்களை அலைக்கழிக்கும் செயல்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும் எனவும் தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசை தர்மசங்கடப்படுத்த ஒரு சில குழுக்கள் முயற்சி!

## பிரதி அமைச்சர் மகிந்த ஜயசிங்க

கொழும்பு, டிசெ. 05

**கல்வி அமைச்சுக்கு வெளியில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது பொலிஸ் உத்தியோகத்தர்கள் பலருக்கு வெட்டுக் காயங்கள் ஏற்பட்டதாகக் கூறிய பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க, தொழிற்சங்கத் தலைவர் என்ற வகையில் தாம் ஆயிரக்கணக்கான மக்களுடன் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகவும் ஆனால் இவ்வாறான துரதிஷ்டவசமான சம்பவங்கள் ஒருபோதும் நிகழவில்லை எனவும் தெரிவித்தார்.**

அரசாங்கத்தை தர்மசங்கடத்தில் ஆழ்த்தும் வகையில் சில ஒழுங்கமைக்கப்பட்ட குழுக்கள் இவ்வாறான செயல்களில் ஈடுபட்டுள்ளதாக தாம் சந்தேகிப்பதாக பிரதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-மூன்று பொலிஸ் அதிகாரிகளுக்கு வெட்டுக் காயங்கள் ஏற்பட்டன. ஒரு பொலிஸ் அதிகாரியின் வெட்டுக் காயங்களுக்கு சுமார் 18 தையல்கள் போடப்பட்டுள்ளன. தொழிற்சங்கத் தலைவர்களாகிய நாங்கள் ஆயிரக்கணக்கான மக்களுடன் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோம். ஆனால், இது போன்ற துரதிர்ஷ்டவசமான சம்பவங்கள் நமது வரலாற்றில் நிகழ்ந்ததில்லை. ஆக்ரோஷமாக இருக்கவேண்டிய பல்கலைக்கழக மாணவர்கள் கூட இதுபோன்ற செயல்களில் ஈடுபடவில்லை, இது ஒரு துரதிர்ஷ்டவசமான நிலை.

அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டும். பிரச்னைகளை தீர்ப்பதற்கு அரசாங்கத்திற்கு போதிய கால அவகாசம் வழங்கப்பட வேண்டும்.

அதற்கு அவர்கள் அரசாங்கத்திற்கு போதிய கால அவகாசம் வழங்காததற்கு நாங்கள் வருந்துகின்றோம்-என்றார்.(அ)

# அனுமதிப்பத்திரமின்றி அரிசி இறக்குமதி செய்ய அனுமதி!

கொழும்பு, டிசெ. 05

இறக்குமதிக் கட்டுப்பாட்டு அனுமதிப்பத்திரமின்றி அரிசி இறக்குமதிக்கு அனுமதி வழங்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-உள்நாட்டுச்சந்தையில் தற்போது அரிசிக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது.

கடும் மழையுடன் கூடிய அனர்த்த நிலையின் காரணமாக நெற்செய்கைக்கு சேதம் ஏற்பட்டுள்ளமையும் அதற்கு காரணமாக அமைந்துள்ளது.

அதனை கருத்தில் கொண்டு அரசி இறக்குமதிக்குத் தற்போது காணப்படுகின்ற மட்டுப்பாடுகளை நீக்குவதற்கு பொருத்தமானதென அமைச்சரவை கருதுகின்றது.

அதற்கமைய,இறக்குமதிக் கட்டுப்பாட்டு அனுமதிப்பத்திரமின்றி எதிர்வரும் 20 ஆம் திகதி வரை எமது நாட்டுக்கான அரிசி இறக்குமதியை உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் அனுமதி வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

70 ஆயிரம் மெற்றிக்தொன் அரிசியை இறக்குமதி செய்ய அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது.அதில் 52 ஆயிரம் மெற்றிக்தொன் அரிசி அரசாங்கத்தின் ஊடாக இறக்குமதி செய்யப்படுகின்றது.அந்த விடயத்தை மேலும் துரிதபடுத்தும் நோக்கிலேயே நாம் தனியாருக்கும் அனுமதி வழங்கியுள்ளோம்.

உள்நாட்டு விவசாயிகளுகளுக்கு பாதிப்பு ஏற்படாத வண்ணமே இந்த இறக்குமதி நடவடிக்கை முன்னெடுக்கப்படும். சந்தையில் ஏற்பட்டுள்ள சிக்கல் நிலைக்கு தற்காலிக தீர்வாகவே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இந்த விடயத்தில் முன்னரை போன்று விளையாட முடியாது. அரசாங்கத் தின் கண்காணிப்பின் கீழேயே இந்த நடவடிக்கைக்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது-என் றார். (அ)

# பயணச் சீட்டு வழங்காத நடத்துநர் பணி நீக்கம் !

கொழும்பு, டிசெ. 05

பயணி ஒருவருக்கு பயணச் சீட்டு வழங்காத பஸ் நடத்துநர் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

கண்டியில் இருந்து கம்பளை நோக்கிச் சென்ற தனியார் பஸ் ஒன்றில் பயணித்த ஒருவர் மேற்கொண்ட முறைப்பாட்டை விசாரித்த போக்குவரத்து அதிகாரசபை அதிகாரிகள் மேற்படி தீர்மானத்தை எடுத்துள்ளனர்.

மத்திய மாகாண போக்குவரத்து அமைச்சின் செயலாளர் மதுபானி பியசேனவின் அறிவுறுத்தலுக்கு அமைய பயணிகள் போக்குவரத்து அதிகார சபை அதிகாரிகள் இந்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.

மத்திய மாகாண தனியார் போக்குவரத்து அமைச்சில் பதிவு செய்யப்பட்ட வீதிப் போக்குவரத்து தனியார் பஸ் நடத்துநர் ஒருவர்,பயணி ஒருவருக்கு பயண சீட்டு வழங்காது இருந்ததுடன் அவரை தூற்றியதாக செய்யப்பட்ட முறைப்பாட்டை அடுத்து மேற்படி நடத்துநரை போக்குவரத்து அதிகார சபை பணி நீக்கம் செய்துள்ளது.

(அ)

# கட்டுநாயக்க விமான நிலையத்தில் பொதியை திருடிய பெண் சிக்கினார்

கொழும்பு, டிசெ. 05

கட்டுநாயக்க விமான நிலையத்தில் இரத்தினக்கல் வர்த்தகர் ஒருவரின் 13 லட்சம் ரூபா பெறுமதியான பொதியை திருடிய வீட்டுப் பணிப்பெண் ஒருவர் நேற்று முன் தினம் காலை கைது செய்யப்பட்டுள்ளார்.

கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸாரால் அவர் கைது செய்யப்பட்டார்.

தெஹிவளை - களுபோவில பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்ட 34 வயதுடைய மாணிக்கக்கல் வர்த்தகர் ஒருவரின் பொதியே இவ்வாறு களவாடப்பட்டுள்ளது.

குறித்த பொதியில் சுமார் 06 இலட்சம் ரூபா பெறுமதியான மாணிக்க கற்கள், வெற்று இரத்தினப் பொதி பெட்டிகள், வர்த்தகரின் ஆடைகள், வாசனைத் திரவியங்கள் மற்றும் பல பெறுமதியான பொருட்கள் இருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 28 ஆம் திகதி டோஹாவில் இருந்து கட்டார் எயார்வேஸ் விமானமானத்தில் வர்த்தகர் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

அங்கு அவர் கொண்டு வந்த இரண்டு பொதிகளில் ஒன்று காணாமல்போயுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டது.

பெண் கைது ஒரு மாதத்திற்குள் இந்த சூட்கேஸ் குறித்த தகவல்களை தொழிலதிபருக்கு வழங்குவதாக அதிகாரிகள் உறுதியளித்தனர்.

அதற்கமைய மேற்கொண்ட விசாரணையின் பின்னர் குறித்த பெண் நேற்று முன் தினம் கைது செய்யப்பட்டார்.

(அ)

# அர்ஜுனாவால் சங்கடத்துக்குள்ளான தேசிய மக்கள் சக்தியின் எம்.பிக்கள்!

கொழும்பு, டிசெ. 05

எதிர்க்கட்சித் தலைவரின் ஆசனத்தில் பாராளுமன்ற உறுப்பினர் அர்ஜுனா இராமநாதன் அமர்ந்து குழப்பம் விளைவித்த செயலால் தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சங்கடத்துக்குள்ளானதாக கொழும்பில் இருந்து வெளிவரும் கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக கடந்த ஞாயிற்றுக்கிழமை வெளியான அந்த வார ஏட்டின் அரசியல் பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: பத்தாவது பாராளுமன்றத்தின் தொடக்க நாளான கடந்த வியாழக்கிழமை பல சிறப்பு நிகழ்வுகள் இடம்பெற்றன.

ஜனாதிபதி அனுரகுமார திசநாயக்கவின் அக்கிராசன உரையை விட சமூக வலைத்தளங்களின் கவனத்தை ஈர்த்தது புதிதாக தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் எதிர்க்கட்சித் தலைவரின் ஆசனத்தில் அமர்ந்து செய்த செய்கைகள்.

புதிய பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் வந்து எதிர்க்கட்சித் தலைவரின் ஆசனத்தில் வந்து அமர்ந்தார். அது எதிர்க்கட்சித் தலைவரின் ஆசனம் என்று பாராளுமன்ற அதிகாரிகள் தெரிவித்தபோதும், அந்த பாராளுமன்ற உறுப்பினர் தொடர்ந்து அந்த ஆசனத்தில் அமர்ந்தார். அதனை அவரே காணொளியாக சமூக வலைத்தளங்களில் பதிவிட்டதாகவும் தெரிகின்றது.

இருப்பினும், இது பொதுவாக பாராளுமன்றத்தில் நடக்காது என்பதால், இந்த காணொளி சமூக ஊடக வலைத்தளங்களில் நிறைய எதிர்ப்பைக் கண்டது. இந்த புதிய பாராளுமன்ற உறுப்பினர் யார் என்பதை அறிய அனைவரும் ஆவலாக இருந்ததையும் காண முடிந்தது.

தேசிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப்படுத்தி யாழ்ப்பாணத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட மருத்துவர் அர்ச்சுனா இராமநாதன் தான் இந்த புதிய பாராளுமன்ற உறுப்பினர் என சில ஊடகங்களும் பலரும் செய்தி வெளியிட்டதால் சமூக வலைத்தளங்களில் தேசிய மக்கள் சக்திக்கு எதிராக பலரும் பிரசாரம் செய்திருந்தனர்.

ஆனால், அவர் தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் அல்லர் என்றும் யாழ்ப்பாணத்தில் இருந்து சுயேச்சைக் குழுவின் ஊடாக பாராளுமன்றத்துக்கு வந்தவர் என்றும் அரசாங்கம் அறிவிப்பு வெளியிட்டது. அதன்படி அனைவரும் இந்த அர்ஜுனா இராமநாதன் யார் என்று அடையாளம் காணத் தொடங்கி விட்டனர் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உள்ளூராட்சி தேர்தலுக்கு வேட்புமனுவை புதிதாகக் கோர அமைச்சரவை அனுமதி

கொழும்பு, டிசெ. 05

உள்ளூராட்சி அதிகாரசபை தேர்தலுக்காக பொறுப்பேற்கப்பட்ட வேட்பு மனுக்களை இரத்து செய்ய அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

கடந்த 2023 ஆம் ஆண்டில் நடத்துவதற்குத் திட்டமிட்டிருந்த உள்ளூராட்சி அதிகாரசபைகளுக்கான தேர்தலில் பொறுப்பேற்கப்பட்ட வேட்பு மனுப் பத்திரங்களை மீளப் பெறல் மற்றும் புதிய நியமனங்களை கோர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று பொறுப்பேற்கப்பட்ட வேட்புமனுப் பத்திரங்களை மீளப் பெறல் மற்றும் புதிய நியமனப் பத்திரங்களைக் கோருவதற்கான ஏற்பாடுகளை வகுப்பதற்காக உள்ளூராட்சி அதிகாரசபைத் தேர்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலமொன்றைத் தயாரிப்பதற்காக சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்கு கடந்த செப்ரெம்பர் மாதம் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சபாநாயகர் தலைமையில் கட்சித் தலைவர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் 2023 ஆம் ஆண்டில் பொறுப்பேற்கப்பட்ட வேட்பு மனுப் பத்திரங்களை இரத்துச் செய்து புதிய நியமனப் பத்திரங்கள் கோரப்பட்டு தொடர்ந்து வரும் உள்ளூராட்சி அதிகாரசபைகளுக்கான தேர்தல் நடத்தப்பட வேண்டுமென உடன்பாடு எட்டப்பட்டுள்ளது.

பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. உள்ளூராட்சி சபை தேர்தல் தற்போதுள்ள சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய வட்டாரம் மற்றும் பட்டியல் ஊடாகவே உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளத்தால் சிரமங்களை எதிர்நோக்கும் மீனவர்கள்!

## கடற்கரைகளில் ஆற்றுவாழைகள்



கொழும்பு, டிசெ. 05

**நாட்டில் கடந்த சில நாட்களாக பெய்துவந்த அடை மழை காரணமாக ஏற்பட்ட வெள்ள நீரை வெளியேற்றும் முயற்சியில் கடலை அண்டிய வாய்க்கால்கள் தோண்டிய பகுதிகளில் ஆற்றுவாழைகள் எனப்படும் ஒரு வகையான தாவரங்கள் நிரம்பி காணப்படுவதனால் கடற்றொழிலாளர்கள் பெரும் சிரமங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர்.**

கடந்த ஒரு வார காலமாக வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் ஏற்பட்ட பாரிய வெள்ள அனர்த்தம் காரணமாக திறந்து விடப்பட்ட குளங்கள் மற்றும் ஆறுகளில் இருந்து இவ்வா றான தாவரங்கள் கடலுடன் சங்கமித்திருப்பதாக கடற்றொழிலாளர்கள் குறிப்பிட்டனர்.

இவ்வாறு கடற்கரையில் கரையொதுங்கிய ஆற்றுவாழை மற்றும் ஆகாய தாமரை போன்ற தாவரங்களால் கரைவலை மற்றும் ஆழ்கடல் கடற்றொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இது தவிர கடற்கரை பகுதியில் இவ்வாறான தாவரங்கள் அதிகமாக காணப்படுவதனால் தொழிலினை மேற்கொள்ள கடற்றொழிலாளர்கள் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

அதுமாத்திரமன்றி இத்தாவரங்களில் நச்சுப் பாம்புகள் இதர உயிரைக் கொல்லும் பாம்புகளும் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ்விடயம் குறித்த உரிய அதிகாரிகள் இப்பிரச்னையில் கவனமின்றி செயற்படுவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். கரையோதுங்கி காணப்படுகின்ற இத்தாவரங்களில் ஏரிகள் மற்றும் குளங்களில் காணப்படுகின்ற பாம்பு போன்ற விஷ ஜந்துக்களும் மக்கள் வாழ் விடங்களை நோக்கி வருகின்ற ஒரு துர்ப்பாக்கிய நிலையும் காணப்படுகிறது.

இதனால் கரையோரப் பாதுகாப்பு மாநகர சபை, பிரதேச செயலகங்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், பொது மக்கள் ஆகியோர் இவற்றை கவனத்தில் கொண்டு கரையோர பிரதேசங்களை சுத்தம் செய்து தமது தொழிலை மேற்கொள்ள பாதுகாப்பான ஒரு சூழலை ஏற்படுத்தித் தருமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# அனுர அரசின் புதிய எம்.பிக்கள் துப்பாக்கிகளைக் கோரவில்லை!

கொழும்பு, டிசெ. 05

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான புதிய அரசாங்கத்திலுள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் எவரும், துப்பாக்கியை பெற்றுக்கொள்வதற்காக இதுவரை விண்ணப்பிக்கவில்லையென பாராளுமன்ற பொதுச் செயலாளர் குஷானி ரோஹணதீர தெரிவித்துள்ளார்.

எந்தவொரு பாராளுமன்ற உறுப்பினரும் துப்பாக்கியை கோரும்போது பரிந்துரைகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் பொதுச் செயலாளர் குஷானி ரோஹணதீர தெரிவித்துள்ளார். அத்துடன் 95 பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வீடுகள் இருப்பதாகவும் மேலும் சுமார் 45 வீடுகள் புனரமைக்கப்பட்டுள்ளதாகவும், மீதமுள்ள உத்தியோக பூர்வ வீடுகளும் விரைவில் புனரமைக்கப்படுமென்றும் அவர் கூறினார். (அ)

# போஞ்சி உள்ளிட்ட மரக்கறிகளின் விலைகள் தொடர்ந்தும் அதிகரிப்பு!

கொழும்பு, டிசெ. 05

சீரற்ற காலநிலை காரணமாக பயிர் செய்கைகளுக்குப் பாதிப்பு ஏற்பட்டதன் காரணமாக சந்தையில் போஞ்சி உள்ளிட்ட பல மரக்கறிகளின் விலைகள் தொடர்ந்தும் அதிகரித்த வண்ணம் உள்ளன.

இதன்படி ஒரு கிலோ கிராம் போஞ்சியின் விலை 900 ரூபாவாக அதிகரித்துள்ளதாக சந்தை தகவல்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன் மேலும் சில மரக்கறிகளின் விலைகள் உயர்ந்துள்ளன.

இதேவேளை. தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தில் கரட் கிலோவொன்றின் மொத்த விலை 60 முதல் 120 ரூபாவாகும். லீக்ஸ் கிலோவொன்று 150 முதல் 170 ரூபாவுக்கு இடைப்பட்ட விலையிலும் விற்பனை செய்யப்படுகிறது.

தக்காளி கிலோவொன்று 200 முதல் 300 ரூபாவுக்கு இடைப்பட்ட விலையிலும், பச்சை மிளகாய் கிலோவொன்று 190 முதல் 200 இடைப்பட்ட விலையிலும், கத்தரிக்காய் கிலோவொன்று 200 ரூபாவுக்கும் தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தில் விற்பனை செய்யப்படுகின்றன. (அ)

# புதிய அரசமைப்பில் மலையக மக்களின் பிரச்னைக்கும் தீர்வு காண்பது அவசியம்!

## இராதாகிருஷ்ணன் எம்.பி. வலியுறுத்து

கொழும்பு, டிசெ. 05

புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படும் போது மலையக மக்களின் பிரச்னைகளுக்கான தீர்வும் அதில் உள்ளடக்கப்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அதே வேளை, 13ஆவது திருத்தத்தை மாற்றியமைப்பதன் மூலம் இந்தியாவுடன் பகைத்துக் கொண்டு அல்லது சீனாவுடன் ஒன்று சேர்ந்து எதையும் சாதிக்க முடியாது என குறிப்பிட்ட அவர், பூகோள ரீதியில் இந்தியா எமக்கு மிகவும் அண்மித்த முக்கிய நாடு என்பதையும் சுட்டிக் காட்டினார்.

ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடன உரை மீதான பாராளுமன்ற விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்-இனவாதம் இல்லாத நாடு ஒன்று அமைய வேண்டும் என்ற நோக்கத்தில் தேசிய மக்கள் சக்தி இந்த அரசாங்கத்தை உருவாக்கியுள்ளது. இது, அனைவரும் பாராட்டக்கூடிய விடயமாகும்.

இம்முறை தேர்தலில் வாக்களிப்பும் இன பாரபட்சம் இல்லாத வகையிலேயே நடந்துள்ளது. இது தொடர்ந்து இடம்பெற வேண்டும் என்பதே எமது புதிய அரசியலமைப்பு கொண்டுவரப்படும் போது மலையக மக்களின் பிரச்னைகளுக்குத் தீர்வு காணும் விடயங்களும் அதில் உள்ளடக்கப்பட வேண்டும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்- என்றார். (அ)

# அதிசொகுசு வாகனங்களை முறையாக அகற்றுவதற்கு அமைச்சரவை அனுமதி!

கொழும்பு, டிசெ. 05

அரச நிறுவனங்களுக்கு பெரும் செலவுகளை ஏற்படுத்தும் சொகுசு வாகனங்களை முறையாக அகற்றுவதற்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

அரச நிறுவனங்களில் பயன்படுத்தப்படும் சில சொகுசு வாகனங்களின் பராமரிப்பு மற்றும் எரிபொருளுக்காக ஏற்படும் அதிக செலவினை கருத்திற் கொண்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான சொகுசு வாகனங்களை அப்புறப்படுத்துவது பொருளாதார ரீதியில் அதிக பலன் அளிப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் தெரிவித்தார்.

அதற்கமைய, சுங்க இயைபு முறை குறியீடு 87.03ன் கீழுள்ள 1800சிசி கொள்ளளவுக்கு அதிகமான பெற்றோல் இயந்திர வாகனங்கள் மற்றும் டபிள் கப், சிங்கிள் கப், வான்கள், பஸ்கள் நீங்கலாக 2300 சிசி கொள்ளளவுக்கு அதிகமான டீசல் இயந்திர வாகனங்கள் என்பவற்றை அடுத்த வருடம் மார்ச் முதலாம் திகதிக்கு முன்னர் சம்பந்தப்பட்ட தலைமை கணக்காய்வு அதிகாரிகளால் அகற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (அ)

# போலி இரத்தினக்கல்லைப் புதைத்து விட்டு பாம்பின் உதவியுடன் நாடகமாடிய ஜோதிடர்

## புதையல் தோண்டுவதாக வர்த்தகரிடம் ரூ.2.9 மில்லியன் மோசடி

கொழும்பு, டிசெ. 05

ஜோதிடர் ஒருவர், வீட்டு உரிமையாளருக்கு தெரியாமல், அவரது வீட்டுத் தோட்டத்தில் போலி இரத்தினக் கற்களைப் புதைத்து வைத்துவிட்டு, தோட்டத்தில் புதையல் புதைக்கப்பட்டிருப்பதாக உரிமையாளரை நம்பவைத்து, புதையலை எடுக்கும் சடங்குகளை மேற்கொண்டு, புதையல் தோண்டியதற்கான பகுதிக் கொடுப்பனவாக ரூ.2.9 மில்லியன் பணத்தை எடுத்துச் சென்றுள்ளார்.

அனுராதபுரம் விமான நிலைய வீதியைச் சேர்ந்த 70 வயதுடைய வர்த்தகர் ஒருவரே மோசடி ஜோதிடரிடம் சிக்கியுள்ளார்.

சந்தேக நபர் சடங்குகள் செய்து போலி இரத்தினக் கொத்தை தோண்டி எடுத்ததுடன், பாம்பாட்டியின் உதவியுடன், நாகப்பாம்பையும் அந்த வீட்டுக்குள் இரகசியமாக விட்டு, புதையலைக் காக்கும் ஆவி என்றும் அதைக் காயப்படுத்தக்கூடாது என்றும் வீட்டின் உரிமையாளரை நம்ப வைத்துள்ளார்.

சம்பவத்துக்கு முதல் நாள், வீட்டின் உரிமையாளர் தனது உழவு இயந்திரத்தை 2.9 மில்லியன் ரூபாவுக்கு விற்பனை செய்துள்ளார். அந்தப் பணம் அவரது வீட்டிலேயே இருந்தது.

உழவு இயந்திரம் வாங்க வந்தவர்களில் ஒருவர், பின்னர் அந்த வர்த்தகரிடம் வந்து, தானொரு ஜோதிடர் என்றும், இந்த வீட்டுக்குள் நுழைந்த போது, வீட்டுத் தோட்டத்துக்குள் பெறுமதியான புதையலொன்று இருப்பதை உணர்ந்ததாகவும் தெரிவித்துள்ளார்.

ஜோதிடர் இரவு நேரம் அந்த வீட்டுக்குள் இரகசியமாக நுழைந்து, தோட்டத்தில் போலி இரத்தினக்கற்களைப் புதைத்துள்ளார்.

மறுநாள் வீட்டு உரிமையாளரை சந்தித்து, புதையல் தோண்டுவதற்கான ஏற்பாடுகளை செய்தார். பாம்பாட்டியொருவரின் மூலம் நாகபாம்பொன்றை, அந்த வீட்டு தோட்டத்துக்குள் இரகசியமாக விட்டுள்ளார். இரத்தினக்கல் தோண்டும் போது, தோட்டத்தில் பாம்பையும் அடையாளம் கண்டு, அந்தப் பாம்புதான், புதையலை காக்கும் ஆவியென குறிப்பிட்டுள்ளார்.

புதையல் தோண்டி, போலி இரத்தினக்கற்கள் மீட்கப்பட்டன. அவற்றின் பெறுமதி ரூ.40 மில்லியனுக்கும் அதிகமானது என குறிப்பிட்டுள்ளார்.

இரத்தினக்கல் புதையல் கிடைத்ததில் வீட்டு உரிமையாளருக்கு தலைகால் புரியவில்லை. பெரும் மகிழ்ச்சியில் இருந்தார்.

புதையல் தோண்டியதற்காக தனது பங்காக ரூ.5 மில்லியனை ஜோதிடம் கேட்டார்.

மகிழ்ச்சியின் உச்சியிலிருந்த வீட்டு உரிமையாளர், உழவு இயந்திரத்தை விற்றதன் மூலம் தனக்குக் கிடைத்த 2.9 மில்லியன் ரூபாவை ஜோதிடரிடம் கொடுத்து, இரத்தினக் கற்களை விற்ற பின்னர் மீதித் தொகையை வழங்குவதாக உறுதியளித்துள்ளார்.

அநுராதபுரம் ருவன் வெலிசாயவுக்கு இரத்தினக் கற்களை எடுத்துச் சென்று ஆவிகளை மகிழ்விக்கும் வகையில் சமயச் சடங்குகளை மேற்கொள்ளுமாறும், அதுவரை வீட்டில் உள்ள விகாரைக்கு அருகில் இரத்தினக் கற்களை வைத்து வழிபடுமாறும் ஜோதிடர் அவருக்கு ஆலோசனை வழங்கினார். ஓரிரு நாட்களில் தான் திரும்பி வருவதாக உறுதியளித்திருந்தார்

இருப்பினும், ஜோதிடர் சொன்னபடி வராததால், வீட்டின் உரிமையாளருக்கு சந்தேகம் ஏற்பட்டது. நகைக் கடைக்காரர் ஒருவரிடம் இரத்தினக் கற்களை எடுத்துச் சென்று பரிசோதித்தபோது, அவை போலியானவை என்பது உறுதியாகியது.

ஒரு மோசடிக்காரனிடம் ஏமாந்துவிட்டதாக வெட்கப்பட்ட வீட்டு உரிமையாளர், ஒரு கொள்ளையன் வீட்டுக்குள் பலவந்தமாக நுழைந்து துப்பாக்கி முனையில் 2.9 மில்லியன் ரூபாயை எடுத்துச் சென்றதாக பொலிஸில் பொய் முறைப்பாடு அளித்துள்ளார்.

இருப்பினும், முறைப்பாட்டின் நம்பகத்தன்மையை சந்தேகித்த பொலிஸார், வர்த்தகரிடம் மேலும் விசாரித்தபோது, அவர் இறுதியில் உண்மையை வெளிப்படுத்தினார்.

அனுராதபுரம் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராளுமன்றில் மூன்று வேளையும் உண்ணும் ஆளும்கட்சி எம்.பிக்கள்!

**விமர்சித்த தயாசிறி ஜயசேகர**

கொழும்பு, டிசெ. 05

**தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பாராளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமைகளை குறைக்கும் என எதிர்பார்த்ததாக பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் காலை மற்றும் மதிய உணவை உட்கொள்வது மட்டுமன்றி, முடிந்தால் இரவிற்கும் உணவை கட்டி எடுத்துச் செல்லும் நிலை காணப்படுகின்றது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.**

பாராளுமன்ற அமர்வுகளின் பின்னர் ஊடகவியலாளர்களிடம் அவர் இந்த கருத்துக்களை வெளியிட்டார்.

கடந்த காலங்களில் தாம் பாராளுமன்ற உணவகத்தில் பகல் உணவு மட்டும் சில நாட்களில் உட்கொண்டதாகவும் காலை உணவு உட்கொண்டதில்லை எனவும் அவர் கூறினார்.

எனினும் தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் காலை மற்றும் மதிய உணவை உட்கொள்வது மட்டுமன்றி, முடிந்தால் இரவுக்கும் உணவை கட்டி எடுத்துச் செல்லும் நிலை காணப்படுகின்றது என அவர் தெரிவித்தார்.

இதற்கு முன்னர் மக்கள் விடுதலை முன்னணியின் 39 உறுப்பினர்கள் பாராளுமன்றுக்கு தெரிவாகியிருந்தபோதும் இந்த நிலையை அவதானிக்க முடிந்தது என தயாசிறி ஜயசேகர குறிப்பிட்டார். (அ)

# மாணவர் 8 பேர் திடீர் சுகயீனம்!

கொழும்பு, டிசெ. 05

கேகாலை, மாவனெல்லை பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் 08 மாணவர்கள் திடீர் சுகயீனமுற்று மாவனெல்லை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

நான்காம் வகுப்பில் கல்வி கற்கும் ஒன்பது வயதுடைய பாடசாலை மாணவர்களே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள பாடசாலை மாணவர்கள் நேற்று முன்தினம் காலை 10 மணியளவில் பாடசாலைக்கு அருகில் உள்ள மரமொன்றிலிருந்த காய்களை உட்கொண்டுள்ளனர்.

இதனையடுத்து, இந்த பாடசாலை மாணவர்கள் வாந்தி பேதி மற்றும் வயிற்றுவலி ஏற்பட்டு திடீர் சுகயீனமுற்றுள்ள நிலையில் மாவனல்லை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள பாடசாலை மாணவர்களின் உடல் நிலைமை கவலைக்கிடமாக இல்லை என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (அ)

# இலங்கை வந்த விமானத்தில் பரபரப்பை ஏற்படுத்திய நபர்

கொழும்பு, டிசெ. 05

ஆஸ்திரேலியாவின் சிட்னியில் இருந்து கட்டுநாயக்கவுக்கு வந்து மீண்டும் அமெரிக்கா நோக்கிச் சென்ற விமானத்தின் அவசர கதவை திறக்க முயற்சித்த வெளிநாட்டவர் கைது செய்யப்பட்டார்.

விமானத்தில் பரபரப்பை ஏற்படுத்திய குறித்த வெளிநாட்டவரை விமானப் பணியாளர்கள் கட்டுப்படுத்தி வைத்துள்ளனர்.

கடந்த 29 ஆம் திகதி இந்த சம்பவம் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது. குறித்த வெளிநாட்டவர் குடிபோதையில் இவ்வாறு செயற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து விமானத்தின் சீற் பெல்ட்களை பயன்படுத்தி இலங்கைக்கு பாதுகாப்பாக அழைத்து வரப்பட்டு கட்டுநாயக்க விமான நிலையப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட வெளிநாட்டவர் கொழும்பு அளுத்கடை நீதிமன்றில் முன்னிலைப்ப டுத்தப்பட்டார்.

குற்றத்தை ஏற்றுக்கொண்ட நிலை யில் 25000 ரூபா அபராதம் விதிக்கப்பட்ட நிலையில், விடுதலை செய்யப்பட்டார்.

# நவம்பர் மாதத்தில் 22,685 இலங்கையர்கள் வேலைவாய்ப்புக்காக வெளிநாடுகளுக்கு!

கொழும்பு, டிசெ. 06

இவ்வருடத்தின் நவம்பர் மாதத்தில் 22,685 இலங்கையர்கள் வேலை வாய்ப்புக்காக வெளிநாடுகளுக்கு சென்றுள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

அதன்படி, இவ்வருடத்தின் ஜனவரி மாதத்திலிருந்து நவம்பர் மாதம் வரையான காலப்பகுதிக்குள் 291,267 இலங்கையர்கள் வேலை வாய்ப்புக்காக வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர்.

அவர்களில் 172,746 ஆண்களும் 118,521 பெண்களும் அடங்குகின்றனர்.

அதிகளவானோர் குவைத் நாட்டுக்கு வேலை வாய்ப்புக்காக சென்றுள்ள நிலையில் அவர்களின் மொத்த எண்ணிக்கை 71,210 ஆகும்.

இந்நிலையில், ஐக்கிய அரபு இராச்சியத்துக்கு 48 083 பேரும், சவுதி அரேபியாவுக்கு 45,008 பேரும், கட்டாருக்கு 43,104 பேரும், இஸ்ரேலுக்கு 9,146 பேரும், ஜப்பானுக்கு 7,983 தென் கொரியாவுக்கு 6,925 பேரும் வேலை வாய்ப்புக்காகச் சென்றுள்ளனர்.

கடந்த 2023 ஆம் ஆண்டில் ஜனவரி மாதத்திலிருந்து நவம்பர் மாதம் வரையான காலப் பகுதிக்குள் 274,265 இலங்கையர்கள் வேலை வாய்ப்புக்காக வெளிநாடுகளுக்கு சென்றுள்ளனர். (அ)

# இலங்கையின் உள்நாட்டுக் கடன் 2.4 பில்லியன் டொலரால் உயர்வு!

கொழும்பு, டிசெ. 05

மூன்றாம் காலாண்டில் இலங்கையின் உள்நாட்டுக் கடன் 2.4 பில்லியன் அமெரிக்க டொலர்களால் அதிகரித்துள்ளது.

அதன்படி, அரசாங்கம் உள்நாட்டுக் கடன் சந்தையில் தொடர்ந்து தங்கியிருப்பதால், மொத்த உள்நாட்டுக் கடன் சுமார் 60 பில்லியன் டொலராக அதிகரித்துள்ளதாக நிதி அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட மூன்றாம் காலாண்டுக்கான கடன் அறிக்கையின் படி, ஜூன் மாத இறுதியில் 57.4 பில்லியன் டொலராக இருந்த இலங்கையின் உள்நாட்டுக் கடன் 59.9 பில்லியன் அமெரிக்க டொலராக உயர்ந்துள்ளது. (அ)

# இடர்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க 345 மில்லியன் ரூபா!

**பிரதியமைச்சர் அருண ஜயசேகர**

கொழும்பு, டிசெ. 05

பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக அரசாங்கம் 345 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளதாக பாதுகாப்பு பிரதியமைச்சர் அருண ஜயசேகர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-பாதிக்கப்பட்ட அனைத்து மக்கள் தொடர்பிலும் அரசாங்கம் விசேட கவனம் செலுத்தியுள்ளது.

இடம்பெற்ற அனர்த்தத்தினால் நாட்டின் 24 மாவட்டங்களின் நேரடியாகவும் மறைமுகமாகவும் இலட்சக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். வடக்கு, கிழக்கு, மத்திய, வட மத்திய மாகாணங்கள் உட்பட பல மாவட்டங்களிலும் இந்த பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. தொடர்ச்சியாக நாட்டில் பெய்த கடும் மழையே இதற்குக் காரணமாகும்.

கடும் மழையுடனான சீரற்ற கால நிலையினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக அரசாங்கம் 345 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

அவசர நிலையை பிரகடனப்படுத்தி ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் முப்படையினர் உட்பட சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனைத்து பணிப்புரைகளையும் வழங்கினார்.

உயிராபத்துக்களிலிருந்து மக்களை பாதுகாப்பதற்காக அனைத்து நடவடிக்கைகளையும் உடனடியாக மேற்கொள்ளுமாறு அவர் கேட்டுக் கொண்டார்.

அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் மற்றும் பிரதியமைச்சர்கள், அந்தந்த பிரதேசங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது பகுதிகளுக்குச் சென்று பாதிக்கப்பட்டுள்ள மக்களின் நிலைமைகளை ஆராய்ந்து தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு அனைவருக்கும் அரசாங்கத்தினால் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன-என்றார். (அ)

# ஓடும் ரயிலில் செல்பி எடுத்த சுற்றுலாப் பயணி படுகாயம்!

கொழும்பு, டிசெ. 05

எல்லவிலிருந்து கொழும்பு கோட்டை நோக்கிப் பயணித்த சுற்றுலா ரயிலில் பயணித்த ஈரானியப் பெண் ஒருவர் செல்பி எடுக்க முற்பட்டபோது ரயிலில் இருந்து கீழே தவறி விழுந்து படுகாயமடைந்துள்ளதாக ஹப்புத்தளை பொலிஸார் தெரிவித்தனர்.

பலத்த காயங்களுக்குள்ளான ஈரானியப் பெண் நுவரெலியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சுற்றுலாவுக்காக இலங்கை வந்த 37 வயதான ஈரானிய பெண் ஒருவரே இவ்வாறு காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, கடந்த சில தினங்களுக்கு முன்னர் கொழும்பு கோட்டை - பதுளை உதார மெனிகே மற்றும் இரவு அஞ்சல் ஆகிய ரயில்களில் பயணித்த வெளிநாட்டு சுற்றுலாப் பயணி ஒருவரும், பல்கலைக் கழக மாணவன் ஒருவனும் ரயிலில் செல்பி எடுக்க முற்பட்ட போது ரயிலில் இருந்து கீழே தவறி விழுந்து படுகாயமடைந்து பதுளை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# புதுப்பிக்கத்தக்க மின் திட்டங்கள் குறித்து ஆய்வு செய்த குழு அறிக்கை கையளிப்பு!

கொழும்பு, டிசெ. 05

நாட்டில் நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ள புதுப்பிக்கத்தக்க மின் திட்டங்கள் குறித்து ஆய்வு செய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை எரிசக்தி அமைச்சிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

குறித்த குழுவினால் சுமார் 40 செயற்திட்டங்கள் ஆராயப்பட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதாக அதன் செயலாளர் பேராசிரியர் உதயங்க ஹேமபால குறிப்பிட்டார்.

அந்த அறிக்கையின் அடிப்படையில் அரசாங்கம் குறிப்பிட்ட திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு பல பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளதாகவும், அதில் சில பரிந்துரைகள் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

அமைச்சரவையில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம், உரிய திட்டங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பான மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் உதயங்க ஹேமபால மேலும் தெரிவித்தார். (அ)

# காலியில் பாதுகாப்பற்ற ரயில் கடவையில் விபத்து!

கொழும்பு, டிசெ. 05

காலி, சுதர்மாராம விகாரைக்கு அருகில் உள்ள பாதுகாப்பற்ற ரயில் கடவையில், ரயில் கடவையை கடக்க முற்பட்ட கார் ஒன்றின் மீது, ரயில் மோதிய விபத்தில் 4 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று முன் தினம் இரவு இடம்பெற்ற குறித்த விபத்தில் படுகாயமடைந்த நான்கு பேரும் காலி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.காயமடைந்த நால்வரில் இரண்டு பேர் சிறுவர்கள் என தெரிவிக்கப்படுகிறது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10 நாட்களாகியும் தண்ணீர் இல்லை!

## மக்கள் கொதிப்பு, போராட்டத்துக்கு முஸ்தீபு!



**காரைதீவு, டிசெ. 05**
**அம்பாறை மாவட்டத்தில் ஏற்பட்ட பெரு வெள்ளத்தில் பிரதான நீர்க் குழாய் உடைத்தெறியப் பட்டதால் பத்து நாட்களாக காரைதீவு கிராமத்துக்கு குழாய் நீர் விநியோகம் முற்றாகத் தடைப்பட்டுள்ளது.**

தற்காலிகமாக, மாவடிப் பள்ளி இணைப்பிலிருந்து குடிநீர் விநியோகத்தை வழங்குவதற்கு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இது தொடர்பில் காரைதீவு பிரதேச காரியாலய பொறுப்பதிகாரி வி. விஜயசாந்தன் கூறுகையில்,மாவடிப்பள்ளியில் இருந்து பெறப்படுகின்ற குடிநீர் காரைதீவில் வலயம் வலயமாக மாற்றி மாற்றி விநியோகிக்க இருக்கின்றோம். பிரதான குழாய்த்திருத்தம் எப்போது முடியும் என்று தற்போது கூற முடியாதுள்ளது- என்றார்.

இதனிடையே பிரதேச சபை முதல் தன்னார்வ அமைப்புகள், சமூகச் செயல்பாட்டாளர்கள் என்று பல தரப்பினர் பௌஸர் மூலம் வீதி வீதியாக குடிநீர் வழங்கி வருகின்றனர்.

எனினும், பிரதான நீர் விநியோகத்தை சீர்செய்வது தொடர்பில் இதுவரை பாராளுமன்ற உறுப்பினர் உதுமாலெப்பையைத் தவிர வேறு யாரும் கவனம் செலுத்தவில்லை என்று பொதுமக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

அத்தோடு, குடிநீர் விநியோ கத்தை சீர்செய்ய தேசிய நீர் வழங் கல் வடிகால மைப்பு சபையின் உதவிப் பொது முகாமையாளர், உயர் அதிகாரிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள் உரிய நடவ டிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

நிந்தவூர், சாய்ந்தமருதைப் பொறுத்தவரை அருகிலிருந்து குடிநீர் பெறப்படுவதால் பெரும் தட்டுப்பாடு இல்லை. ஆனால், காரைதீவுக்கு ஒரு வழியிலும் நீர் விநியோகம் இல்லை.

இதனால், காரைதீவு பொது மக்கள் கொதிப்படைந்துள்ளனர். குடிநீர் இன்று வரும், நாளை வரும் என்று எதிர்பார்த்த மக்களுக்கு கடந்த பத்து நாட்களாக கிடைத்தது ஏமாற்றமே.

விடயங்கள் பெயரளவில் இருப்பதாகவும் குழாய் திருத்த செயல்பாடுகள் மந்தகதியில் நடைபெறுவதாகவும் அறியமுடிகிறது.

சபையின் பொறுப்பாளிகள் மக்களுக்கு இதுவரை உத்தியோகபூர்வமாக எதனையும் சொல்லவில்லை.

களியோடை அருகே சேதமடைந்த பாலம் நிரந்தரமாக திருத்தப் படுகிறது.

ஆனால், அத்தியாவசிய தேவையான தண்ணீர் தொடர்பில் இவ்வாறு பாராமுகமாக இருப்பது கவலையளிக்கின்றது. பாரபட்சம் காட்டப் படுகிறது என்று கருதுகிறோம்.

விடயம் அறிந்த சமூக சேவையாளர்கள் உண்மை நிலையை அறிந்து செயல்பாட்டை துரிதப்படுத்த அதிகாரிகளுக்கு அழுத்தம் கொடுத்தோ அல்லது திறம்பட நடந்தால் அவர்களுக்கு ஊக்கமளிப்பதன் மூலமோ இன்னும் துரிதப்படுத்தலாம் என்று காரைதீவு மக்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, குடிநீர் விநியோகம் சீர்செய்யப்படா விட்டால் போராட்டம் நடத்தப் படும் என்றும் கூறினர். (எ)

## கல்முனை மருத்துவமனை பணிப்பாளராக சுகுணன்



கல்முனை, டிசெ. 05
கல்முனை ஆதார மருத்துவமனையின் புதிய பணிப்பாளராக மருத்துவர் குணசிங்கம் சுகுணன் நேற்றுப் புதன்கிழமை பதவியேற்றார்.

முன்னதாக களுவாஞ்சிக்குடி ஆதார மருத்துவமனையில் சேவையாற்றிய இவர் இடமாற்றம் பெற்று கல்முனை பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளராக கொரோனா காலகட்டத்தில் பணியாற்றினார்.

பின்னர் மட்டக்களப்பு மாவட்டத்தில் பதில் பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளராக கடமையாற்றிய இவர் வவுனியா மாவட்ட பொது மருத்துவமனையின் பணிப்பாளராக பணியாற்றினார்.

தற்போது அங்கிருந்து இடமாற்றலாகி கல்முனை ஆதார மருத்துவமனையின் பணிப்பாளராக நியமிக்கப் பட்டு நேற்றுப் புதன்கிழமை காலை பதவியேற்றார். (எ)

## கோமாரி மற்றும் செல்வபுரத்தில் காட்டு யானைகள் அட்டகாசம்

### மயிரிழையில் உயிர் தப்பிய அறுவர்

பொத்துவில், டிசெ. 05
அம்பாறை மாவட் டம் பொத்துவில் பிரதே சத்தில் உள்ள கோமாரி மற்றும் செல்வபுரம் பகுதிகளில் நள் ளிரவில் காட்டு யானை கள் பெரும் அட்டகா சம் செய்துள்ளன.

கோமாரிப் பகுதியில் ச. திலகராசா என்பவரின் வீட்டை உடைத்து அங்கிருந்த நெல்லை உண்டு சேதப் படுத்தியுள்ளது.

அது மாத்திரமல்லாது அங்கு சமையலறையில் இருந்த பால்மா மற்றும் பல உணவுப் பண்டங்களையும் உண்டு சேதப்படுத்தியது.

அந்த வீட்டின் பல பகுதிகளையும் உடைத்து சேதப்படுத்தியுள்ளது.

அப்போது, வீட்டுக்குள் இருந்த மூன்று பெண் பிள்ளைகளும் தாயும் தந்தையும் பின்னாலுள்ள ஜன்னல் வழியாக பாய்ந்து மயிரிழையில் தப்பியோடி உயிர்தப்பினர்.

இதேவேளை, செல்வபுரத்தில் மூன்று வீடுகளையும் மதில்களையும் காட்டு யானைகள் உடைத்து சேதப்படுத்தியுள்ளன.



பொத்துவில் கோமாரி பிரதேசத்தில் கடந்த இருமாதங்களாக காட்டு யானைகள்ின் தாக்குதல் சம்பவங்கள் கூடுதலாக இடம்பெற்று வருகின்றன. அத்தோடு, இருவர் கொல்லப் பட்டனர் .

ஆனால், காட்டு யானைகளின் தாக்குதல்களைத் தடுக்க இதுவரை எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று பொதுமக்கள் கவலையுடன் தெரிவித்தனர். (எ)

## மருதமுனையில் வடிகான் அமைக்கும் பணிகள் துரித கதியில் முன்னெடுப்பு



மருதமுனை, டிசெ. 05
மழைக்காலத்தில் வெள்ளத்தில் மூழ் கும் மருதமுனை 65 மீற்றர் சுனாமி மீள் குடியேற்றக் கிராம மக்களின் பாது காப்பு கருதி கல்முனை மாநகர சபை யால் துரித கதியில் வடிகான் கள் அமைக்கப்பட்டு வருகின் றன.

இப்பிரதேச மக்கள் நீண்ட காலமாக எதிர்நோக்கி வருகின்ற வெள்ள அனர்த்த பிரச்னைக்கு தீர்வு காணும் பொருட்டு இங்கு 05 முக்கிய இடங்களில் வடிகான்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின் ஊடாக இப்பிரதேசத்தில் உள்ள அனைத்து வடிகான்களும் இணைக்கப் பட்டு வடிகான் கட்டமைப்பு முழுமைப்படுத்தப்படவுள்ளது.

இந்த வடிகான் நிர்மாணப் பணிகளை கல்முனை மாநகர சபை ஆணையாளர் என். எம். நௌபீஸ் பார்வையிட்டார்.

இதன்போது வேலைத் திட்டத்தை துரிதமாக நிறைவு செய்யுமாறு அவர் அறிவுறுத்தினார்.

இதன்போது, கல்முனை மாநகர சபையின் உதவி ஆணையாளர் ஏ. எஸ். எம். அஸீம், பொறியியலாளர் ஏ. ஜே. ஏ. எச். ஜௌசி, கணக்காளர் வை. ஹபீபுல்லாஹ், வேலைகள் அத்தியட்சகர் பி. ரி. எம். நஹீம், தொழில் நுட்ப உத்தியோகத்தர் எம். சுகுமார் உள்ளிட்டோரும் பங்கேற்றனர்.

மழைக்காலங்களில் வெள்ளத்தில் மூழ்கித் தத்தளிக்கும் மருதமுனை 65 மீற்றர் கிராமத்தின் நீண்ட காலப் பிரச்னைக்கு கல்முனை மாநகர சபை மிகவும் கரிசனையுடன் தீர்வைப் பெற்றுத் தந்திருப்பதையிட்டு இப்பகுதி மக்களும் நலன் விரும்பிகளும் மாநகர ஆணையாளர் உள்ளிட்ட அதிகாரிகளுக்கு நன்றி தெரிவித்தனர். (எ)

காஷிபுல் அரபுக் கல்லூரிக்கு

## புதிய நிர்வாக சபையை நியமிக்குமாறு உத்தரவு

கல்முனை, டிசெ. 05
மாவடிப்பள்ளி பிரதேசத்தில் இடம்பெற்ற அனர்த்ததுடன் தொடர்புடைய நிந்தவூர் காஷிபுல் உலூம் அரபுக் கல்லூரிக்கு புதிய நிர்வாக சபையொன்றை நியமிக்குமாறு சம்மாந்துறை நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

குறித்த அரபுக் கல்லூரியின் தற்போதைய நிர்வாக சபையை கலைத்து விட்டு புதிய நிர்வாக சபையை உடனடியாக நியமிக்குமாறு முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்துக்கு நீதிவான் டி. கருணாகரன் உத்தரவிட்டுள்ளார்.

மாவடிப்பள்ளி பிரதேசத்தில் கடந்த 26 ஆம் திகதி இடம்பெற்ற விபத்தில் குறித்த அரபுக் கல்லூரியின் ஆறு மாணவர்கள் உட்பட எட்டுப் பேர் உயிரிழந்தனர்.

இதனையடுத்து அரபுக் கல்லூரியின் அதிபர் மற்றும் ஆசிரியர் உட்பட நான்கு பேர் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் இவ்வழக்கு விசாரணைகள் முடிவடையும் வரை குறித்த அரபுக் கல்லூரியின் அதிபர் மற்றும் ஆசிரியர் ஆகியோர் அரபுக் கல்லூரிக்கு செல்லக்கூடாது எனவும் நீதிவான் உத்தரவு பிறப்பித்தார்.

குறித்த விசாரணையின் போது காரைதீவு பிரதேச செயலாளர், மாவட்ட அனர்த்த நிவாரண சேவைகள் அதிகாரி ஆகியோரும் மன்றில் முன்னிலையாகினர்.

குறித்த வழக்கை நீதிவான் எதிர்வரும் 16 ஆம் திகதி வரை ஒத்திவைத்ததுடன் நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபையினரையும் அடுத்த தவணையின் போது மன்றில் முன்னிலையாகுமாறு உத்தரவிட்டுள்ளார்.

## 8 கிலோ கேரள கஞ்சாவுடன் திருமலையில் ஒருவர் கைது

திருகோணமலை, டிசெ. 05
திருகோணமலை, அன்புவழிபுரம் பிரதேசத்தை சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர், 8 கிலோ கிராம் கேரளக் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

திருகோணமலை பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் செவ்வாய்க்கிழமை இரவு இவரைக் கைது செய்தனர்.

கேரளக் கஞ்சா கடத்தப்படுவதாக தங்களுக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து, குறித்த இடத்துக்குச் சென்று, இந்த நபரை சோதனை செய்த போது, அவரிடமிருந்து 8 கிராம் கேரளக் கஞ்சாவை கைப்பற்றியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் மேலதிக விசாரணைக்காக திருகோணமலை, உப்புவெளி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டிருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (எ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்கொரியாவில் திடீர் அவசர நிலை பிரகடனம்!

## எதிர்க்கட்சிகளின் போராட்டத்தால் ஒரே நாளில் வாபஸ் பெற்றது அரசு

**சியோல், டிசெ. 05**

**தென்கொரியாவில் திடீரென அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்ட நிலையில் ஒரு சில மணி நேரங்களில் எதிர்க்கட்சிகளின் போராட்டத்தால் அது இரத்துச் செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.**



தொலைக்காட்சி வாயிலாக பொதுமக்களிடம் உரையாற்றிய தென்கொரிய ஜனாதிபதி யூன் சாக் யோல், வடகொரிய ஆதரவாளர்களை எமது நாட்டிலிருந்து வெளியேற்றுவதற்காகவும் அரசுக்கு எதிரான சக்திகளை ஒடுக்குவதற்காகவும் நாட் டில் அவசர நிலை பிரகடனப்ப டுத்தப்படுவதாக அறிவித்தார்.

50 ஆண்டுகளில் தென்கொ ரியாவில் அவசர நிலை சட்டம் அமுல்படுத்தப்பட்டது இதுவே முதல்முறை. இந்த அவசர நிலை சட்டத்துக்கு எதிராக அந்த நாட்டு பாராளுமன்றத் தில் 190 எம்.பிக்கள் வாக்களித்தனர். தொடர்ந்து பாராளுமன்ற வளாகத்திலேயே போராட்டத்திலும் ஈடுபட் டனர்.

இந்தச் சட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் பாராளுமன்ற நுழைவாயிலில் ஆயிரக்கணக்கான மக்கள் குவிந்து தென் கொரிய ஜனாதி பதி யூன் சாக் யோலுக்கு எதிராக கோஷங்களை எழுப்பினர். உடனடியாக அங்கு இராணுவத்தினர் குவிக்கப்பட்டனர்.

ஆயிரக்கணக்கான போராட்டக்காரர்கள் ஒரே நேரத்தில் பாராளுமன்றத்துக்குள் நுழைய முற்பட்டதால் இராணுவத்தினருக்கும் போராட்டக்காரர்களுக்கும் இடையே மோதல் வெடித்தது. இதனால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது. இதனையடுத்து ஜனாதிபதியின் அவசர நிலை அறிவிப்பு செல்லாது என்று பாராளுமன்ற சபாநாயகர் வூன் வொன் சிக் அறிவித்தார்.

இந்த அறிவிப்பு வெளியானதைத் தொடர்ந்து பாராளுமன்றத்துக்கு வெளியே கூடியிருந்த போராட்டக்காரர் கள் பலரும் ஆரவாரம் செய்து கொண்டாடினர். இந்த அவசர நிலை பிரகடன விவகாரம் பூதா கரமானதைத் தொடர்ந்து ஜனா திபதி யூன் பதவி விலக வேண் டும் என்ற கோரிக்கைகள் வலுப்பெற்றுள்ளன.

தென் கொரியாவை 20 ஆண்டுகாலம் ஆட்சி செய்து வந்த பார்க் சங் ஹீ 1979இல் கொல்லப்பட்டபோது அங்கு அவசர நிலை அறிவிக்கப் பட்டது. (எ)

# இந்தியா ஓர் ஆய்வு கூடம்

## பில்கேட்ஸ் சர்ச்சை கருத்து



வாஷிங்டன், டிசெ. 05

"பல விடயங்களை முயற்சிக்கும் ஓர் ஆய்வு கூடம் இந்தியா" என்று மைக்ரோசொப்ட் நிறுவுநர் பில்கேட்ஸ் தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றுக்கு அவர் வழங்கிய நேர்காணலில் தெரிவித்தவை வருமாறு, "சுகாதாரம், ஊட்டச்சத்து, கல்வி போன்ற பல கடினமான விடயங்களில் முன்னேற்றம் காணும் நாட்டுக்கு உதாரணமாக இந்தியாவைக் கூறலாம்.

இந்திய அரசு போதியளவில் வருவாய் ஈட்டி நிலைத்தன்மையுடன் உள்ளது. இதன் காரணமாக, இன்னும் 20 ஆண்டுகளில் அங்குள்ள மக்கள் சிறந்த நிலைக்குச் செல்லும் வாய்ப்புகள் உள்ளன. பல விடயங்களை முயற்சிக்கும் ஆய்வு கூடமாக இந்தியாவுள்ளது. இதன் வெற்றியை இந்தியாவில் நிரூபிக்கும்போது, அந்த நடைமுறையை நாம் பிற இடங்களுக்கு எடுத்துச் செல்லலாம்.

வெளிநாடுகளில் இருக்கும் மைக்ரோசொப்ட் அறக்கட்டளை அலுவலங்களில், இந்தியாவில் இருக்கும் அலுவலகம் மிகப் பெரியது. உலகின் பல இடங்களில் நாங்கள் மேற்கொள்ளும் பெரும்பாலான திட்டங்கள் இந்தியாவுடன் தொடர்புடையவைதான்"- என்றார்.

இவரது கருத்துக்கு ஆதரவாகவும், எதிராகவும் இந்தியர்கள் பலர் சமூக ஊடகங்களில் கருத்து வெளியிட்டு வருகின்றனர். (எ)

# பங்களாதேஷ் தூதரகத்துக்குள் நுழைந்த ஆர்ப்பாட்டக்காரர்கள்

அகர்தலா, டிசெ. 05

பங்களாதேஷில் இஸ்கான் அமைப்பின் தலைவர் சின்மோய் கிருஷ்ண தாஸ் கைது செய்யப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து திரிபுரா தலைநகர் அகர்தலாவில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

அப்போது, அகர்தலாவில் உள்ள பங்களாதேஷ் துணைத் தூதரகத்தில் சிலர் அத்துமீறி நுழைந்து அந்த நாட்டு கொடியை சேதப்படுத்தினர். இந்தச் சம்பவத்தை அடுத்து, பங்களாதேஷ் அரசு இந்தியத் தூதருக்கு அழைப்பாணை அனுப்பியது.

மேலும், அகர்தலா துணைத் தூதரகத்தில் வீசா சேவை உட்பட அனைத்து சேவைகளும் மறு அறிவிப்பு வரும் வரை தற்காலிகமாக நிறுத்தப்படுவதாகவும் அறிவித்தது.

அகர்தலாவில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவத்தை அடுத்து, ஏழு பேர் கைது செய்யப்பட்டனர். பொலிஸ் அதிகாரிகள் மூவர் பணி இடைநீக்கம் செய்யப்பட்டனர்.(எ)

# துணைத் தூதரகத்தில் அத்துமீறல் இந்திய தூதருக்கு அழைப்பாணை

டாக்கா, டிசெ. 05

இந்தியாவின் திரி புராவின் அகர் தலா வில் உள்ள பங்களா தேஷ்து ணைத் தூதர கத்தில் இடம் பெற்ற அத்துமீறல் தொடர் பில் உரிய விளக்கமளிக்க இந்தியத் தூத ருக்கு பங்களா தேஷ் அரசு அழைப்பாணை அனுப்பியுள்ளது.

இதையடுத்து, பங்களாதேஷுக்கான இந்தியத் தூதர் பிரனாய் வெர்மா, பங்களாதேஷின் வெளிவிவகாரச் செயலாளர் ரியாஸ் ஹமிதுல்லாவை சந்தித்தார். பின்னர் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்ட பிரனாய் வெர்மா, "இந்தியா - பங்களாதேஷ் இடையே பரந்த பன்முக உறவு உள்ளது. அதனை ஒரே ஒரு விடயமாக சுருக்க முடியாது. மின் விநியோகம், அத்தியாவசியப் பொருட்களுக்கான இறக்குமதி என இரு நாடுகளுக்கும் இடையே பல்வேறு விடயங்களில் முன்னேற்றங்கள் உள்ளன.

நாங்கள் உண் மையில் நேர்மறையான, நிலையான, ஆக்கபூர்வமான உறவை முன்னோக்கி நகர்த்த விரும்புகிறோம். அதற்காக நாங்கள் பல்வேறு விடயங்களை செய்து கொண்டிருக்கிறோம். இரு நாடுகளும் பரஸ்பரம் ஒன்றை ஒன்று சார்ந் திருக்கின்றன. இதன் மூலம் பரஸ்பர நன்மைகளை உருவாக்க விரும்புகிறோம். மேலும், நமது ஒத்துழைப்பு நம் இருவருக்கும் நன்மை பயக்கும் என்பதை நாங்கள் உறுதி செய்வோம்.

கடந்த சில மாதங்களில், அது வர்த்தகமாக இருந்தாலும், மின்சாரம் பரிமாற்றமாக இருந்தாலும், அத்தியாவசிய பொருட்களின் விநியோகமாக இருந்தாலும், நாங்கள் நேர்மறையான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம்.

நாங்கள் பங்களாதேஷின் இடைக்கால அரசாங்கத்துடன் இணைந்து செயல்படத் தயாராக உள்ளோம். மேலும், அமைதி, பாதுகாப்பு மற்றும் வளர்ச்சியில் நமது பகிரப்பட்ட விருப்பங்களை அடைய இணைந்து செயல்பட உறுதிபூண்டுள்ளோம்"- என்றார். (எ)

# தேசிய ஒற்றுமைக்கு யூனுஸ் அழைப்பு

டாக்கா, டிசெ. 05

நாட்டு மக்கள் அனைவரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்று பங்களாதேஷ் இடைக்கால அரசின் தலைமை ஆலோசகர் முகம்மது யூனுஸ் கேட்டுக் கொண்டுள்ளார்.

அத்தோடு, இன்று அரசியல் கட்சிகளின் தலைவர்களையும் மதத் தலைவர்களையும் சந்திக்க அவர் திட்டமிட்டுள்ளார்.(எ)

# படுகொலைகளுக்கு யூனுஸ்தான் காரணம்

## ஷேக் ஹசீனா பகிரங்க குற்றச்சாட்டு



நியூயோர்க், டிசெ. 05

பங்களாதேஷில் இடம்பெற்ற ஆட்சி கவிழ்ப்பு கிளர்ச்சிக்கும் படுகொலைகளுக்கும் மூளையாக செயல்பட்டவர் முகம்மது யூனுஸ் தான் என்று முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனா பகிரங்கமாக குற்றஞ்சாட்டியுள்ளார்.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் நடைபெற்ற கட்சி நிகழ்ச்சியில் காணொலி வாயிலாக ஷேக் ஹசீனா உரையாற்றினார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு குற்றஞ்சாட்டினார்.

பங்களாதேஷில் இடஒதுக்கீட்டுக்கு எதிராக மாணவர்கள் நடத்திய போராட்டம் வன்முறையாக மாறியது. பல இடங்களில் மாணவர்களுக்கும், ஆளும் அவாமி லீக் கட்சியினருக்கும் இடையே மோதல் வெடித்தது. போராட்டத்தை ஒடுக்குவதற்காக பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இந்த வன்முறை போராட்டங்களில் மாணவர்கள், பொலிஸார், அப்பாவி பொதுமக்கள் என ஏராளமானோர் கொல்லப்பட்டனர். பிரதமரின் இல்லத்தை போராட்டக்குழுவினர் முற்று கையிட்டதால் பெரும் பதற்றம் உருவானது.

இவ்வாறு அசாதாரண சூழல் நிலவியதையடுத்து, கடந்த ஓகஸ்ட் 5ஆம் திகதி பிரதமர் ஷேக் ஹசீனா பதவியை இராஜினாமா செய்துவிட்டு இந்தியாவில் தஞ்சமடைந்தார். பங்களாதேஷில் அவாமி லீக் அரசாங்கம் கவிழ்ந்ததையடுத்து, முகமது யூனுஸ் தலைமையிலான இடைக்கால அரசு பொறுப்பேற்றது.

இடைக்கால அரசு பொறுப்பேற்றபிறகு நாட்டில் சிறுபான்மையினருக்கு எதிரான வன்முறை அதிகரிக்கத் தொடங்கியது. குறிப்பாக இந்துக்கள் மீது தொடர்ந்து தாக்குதல் நடத்தப்படுகிறது. அண்மையில் இந்து அமைப்பின் தலைவரும், இஸ்கான் முன்னாள் துறவியுமான சின்மய் கிருஷ்ண தாஸ் தேசத்துரோக வழக்கில் கைது செய்யப்பட்ட சம்பவம் அந்த நாட்டில் பதற்றத்தை மேலும் அதிகரித்தது.

இந்த நிலையில், நியூயோர்க்கில் நடைபெற்ற கட்சி நிகழ்ச்சியில் காணொலி வாயிலாக ஷேக் ஹசீனா உரையாற்றினார். அப்போது, பங்களாதேஷில் இந்துக் கோவில்கள், தேவாலயங்கள் மற்றும் மத அமைப்பான இஸ்கான் மீதான தொடர் தாக்குதல்களுக்காக இடைக்கால அரசின் தலைவர் முகமது யூனுஸை கடுமையாக சாடினார்.

அத்தோடு, பங்களாதேஷில் நடந்த படுகொலைகளுக்காக என் மீது இன்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. உண்மையில், முகமது யூனுஸ்தான் மாணவர் ஒருங்கிணைப்பாளர்களுடன் இணைந்து திட்டமிட்டு படுகொலைகளை நிகழ்த்தியுள்ளார். இன்று ஆசிரியர்கள், பொலிஸார் என அனைவரும் தாக்கப்பட்டு கொல்லப்படுகிறார்கள். இந்துக்கள், பௌத்தர்கள், கிறிஸ்தவர்கள் குறிவைத்து தாக் கப்படுகிறார்கள். தேவாலயங் கள் மற்றும் பல கோவில்கள் தாக்கப்பட்டுள்ளன. பங்களா தேஷில் சிறுபான்மையினர் குறிவைக்கப்படுவது ஏன்?

நான் படுகொலையை விரும்பவில்லை. நான் ஆட்சியைப் பிடிக்க நினைத்திருந்தால் படுகொலை நடந்திருக்கும். மக்கள் கண்மூடித்தனமாக கொல்லப்படும்போது, நான் வெளியேற வேண்டும் என்று முடிவு செய்தேன். அன்று எனது பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தியிருந்தால், கானா பவனில் (பிரதமர் இல்லம்) பலர் இறந்திருப்பார்கள். அதை நான் விரும்பவில்லை. அதனால் நாட்டைவிட்டு வெளியேறினேன்- என்றார்.(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பிக்கை வைப்பதற்கான ஒரு நேரம் காப்பாற்றுவதற்கு ஓர் உறுதிமொழி!



கலாநிதி ஜெகான் பெரேரா

செப்டெம்பர் ஜனாதிபதி தேர்தலையும் நவம்பர் பாராளுமன்ற தேர்தலையும் தொடர்ந்து இலங்கையில் ஏற்பட்ட அண்மைய அரசியல் நிலைமாறுதல் பாகுபாடு காட்டுகின்ற போக்கின் விளைவாக தோன்றிய ஆழமான பிரச்சினைகளை கையாளுவதற்கு ஒரு திருப்புமுனை வாய்ப்பை தருகிறது. பத்தாவது பாராளுமன்றத்தின் கூட்டத்தொடரை ஆரம்பித்து வைத்து தனது அரசாங்கத்தின் கொள்கை விளக்கவுரையை நிகழ்த்திய ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க இலங்கையில் இனவாதத்தையும் மதத் தீவிரவாதத்தையும் தடுப்பதில் கொண்டிருக்கும் உறுதிப்பாட்டை அழுத்திக் கூறினார்.

இனவாத அரசியலும் மதத்தீவிரவாதமும் மீண்டும் தலையெடுப்பதற்கு தனது அரசாங்கம் அனுமதிக்கப் போவதில்லை என்று கூறிய அவர் அச்சமும் சந்தேகமும் இல்லாத ஜனநாயக அரசொன்றை நிறுவப்போவதாக சூளுரைத்தார். சட்டத்தின் ஆட்சியின் முக்கியத்துவத்தை வலியுறுத்திய ஜனாதிபதி சட்டத்திற்கு மேலானவர் என்று எந்தவொரு தனிநபருமோ அல்லது அரசியல்வாதியுமோ இல்லை என்பது உறுதிப்படுத்தப்படும் என்றும் குறிப்பிட்டார். சர்ச்சைக்குரிய குற்றச்செயல்களை விசாரித்து பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை வழங்குவதுடன் சட்டமுறைமை மீதான நம்பிக்கையை மீளக்கட்டி யெழுப்பப்போவதாக அவர் தனதுரையில் உறுதியளித்தார்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் பகிரங்க முகம் என்ற வகையில் ஜனாதிபதி திசாநாயக்க எதிர்பார்ப்புகளை விஞ்சிவிட்டார். அரசாங்கத்தின் முதன்மையான தொடர்பாடல்காரராக அவர் விளங்குகிறார். மக்கள் மத்தியிலான தனது ஆரம்ப வாழ்வையோ அல்லது கொள்கைகளையோ அவர் மறந்து விடவில்லை. அவரது உடைநடையில் அதை தெளிவாகக் காணமுடியும். இனவாதமும் இன வெறுப்பும் நாட்டில் மீண்டும் வேர் விடுவதற்கு அனுமதிக்கப் போவதில்லை என்ற ஜனாதிபதியின் சூளுரை அவர் வளர்ந்து வந்த பண்புமுறைமைக்கு இன்னொரு சான்றாகும்.

சிங்கள பௌத்த இராச்சியங்களின் மையப் பிராந்தியமாக ஒரு காலத்தில் விளங்கிய வடமத்திய மாகாணத்தின் விவசாய வலயங்களில் ஜனாதிபதியின் தோற்றுவாயும் வறுமையுடனான அவரது தனிப்பட்ட போராட்டமும் இலங்கையின் முன்னைய அரசாங்கங்களினால் நடைமுறைப்படுத்தப்பட்ட சமூக நலன் புரி திட்டங்களின் உதவியுடன் அந்த போராட்டத்தை வெற்றிகொண்ட விதமும் இலங்கையின் வெற்றிக் கதையின் முழுநிறைவான ஒரு எடுத்துக்காட்டாக அவரை விளங்க வைத்திருக்கிறது.

பல தசாப்தங்களுக்கு முன்னர் இலங்கையின் இன்னொரு தலைவர், "வெறுப்பை வெறுப்பினால் ஒழிக்கமுடியாது. அன்பினாலேயே ஒழிக்கமுடியும்" என்று பௌத்த போதனையை மேற்கோள் காட்டினார். அந்த வார்த்தைகளை கொழும்பில் உள்ள தற்போதைய ஜப்பானிய தூதுவர் தனது உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் அண்மையில் நிகழ்த்திய வரவேற்புரையில் நினைவுபடுத்தினார். இரண்டாவது உலக மகாயுத்தத்தில் தோற்கடிக்கப்பட்ட பிறகு இழப்பீட்டைச் செலுத்தவேண்டும் என்று நிர்ப்பந்திக்கப்படுவதில் இருந்து ஜப்பானைப் பாதுகாக்க முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தனாவும் இதே வார்த்தைகளைப் பேசினார்.

இந்த வார்த்தைகள் உலகில் எந்தளவுக்கு நடைமுறையில் பின்பற்றப்படுகிறது என்பதே முக்கியமான கேள்வி. ஜனாதிபதி ஜெயவர்தன உலகிற்கு தான் பேசிய அந்த வார்த்தைகளை தனது சொந்த நாட்டில் நடைமுறையில் கடைப்பிடிக்கத் தவறியது துரதிர்ஷ்ட வசமானதாகும். ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி. )வும் விடுதலை புலிகளும் முன்னெடுத்த கிளர்ச்சிகளில் எளிதில் கையாளமுடியாத எதிரிகளுக்கு முகங்கொடுத்தபோது ஜெயவர்தன மூர்க்கத்தனமான அரச வன்முறையை கிளர்ச்சிக் குழுக்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விட்டார்.

**இறந்தவர்களை நினைவுகூருதல்**

ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தான் பேசுகின்ற பண்புகளின் பிரகாரம் இதுவரையில் வாழ்ந்தும் நடந்தும் வருகின்றார் என்று தோன்றுகிறது. ஜனாதிபதி தேர்தலில் அவர் வெற்றிபெற்று இரு மாதங்களே கடந்திருக்கும் நிலையில், நிச்சயமாக எதையும் கூறுவது தற்போதைய தருணத்தில் பொருத்தமில்லாததாக இருக்கக் கூடும். ஆனால், அவரது சொல்லிலும் செய லிலும் தேசிய நலன்களுக்கு முன்னுரிமை கொடுப்பதில் காண்பிக்கின்ற அக்கறை யிலும் நேர்மையின் அறிகுறிகள் தெளி வாக தெரிகின்றன.

சர்வதேச நாணய நிதியத்துடன் முன்னைய அரசாங்கம் இணங்கிக் கொண்ட நடை முறைச் சாத் தியமான பொருளா தாரக் கொள்கை களை தேசிய மக் கள் சக்தியின் மையக் கட்சியான ஜே.வி.பி. ஏற்றுக் கொள்ளத் தக்கதாக அதை வழிநடத்திய முறையில் இதை காணக்கூடியதாக இருக்கிறது. சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனை களின் விளைவாக மக்கள் பெரும் கஷ்டங்களை அனுபவிக்கின்ற போதிலும், தற்போதைய தருணத் தில் நடைமுறைச் சாத்தியமான மாற்று வழி எதுவும் இல்லை என்றே தோன்றுகிறது.

ஜனாதிபதியையும் அவரது அரசாங்கத்தையும் விமர்சிப்பவர்கள் தாங்கள் அதிகாரத்துக்கு வந்திருந்தாலும் கூட வேறு விதமாகச் செயற்படுவதற்கான வாய்ப்பு இருந்திருக்காது. ஆனால் சில வேளை தங்களுக்கு தேவையானதை அவர்கள் எடுத்திருக்கக்கூடும். அதனால் தான் அவர்களை மக்கள் நிராகரித்தார்கள்.

போரில் உயிர்துறந்தவர்களின் உறவினர்கள் மாவீரர்கள் தினம் என்று அறியப்பட்ட தினத்தில் நினைவேந்தலைச் செய்வதற்கு அனுமதிக்கப்பட்டது தொடர்பான சர்ச்சையில் அரசாங்கத்தின் அணுகுமுறை ஜனாதிபதியும் அவரது நிருவாகமும் தங்களது பண்புகளைப் பின்பற்றுவதில் உறுதியாக இருக்கிறார்கள் என்பதை காண்பிக்கும் இன்னொரு சந்தர்ப்பமாகும்.

மாண்டுபோன தங்கள் பிள்ளைகளுக்கு நினைவேந்தல் செய்ய விரும்புகிறவர்கள் ஒரு சமூகமான அமைதியான முறையில் நினைவு கூருவதற்கு வாய்ப்பளிக்கப்பட்டது. இது உண்மையில் இழப்பீட்டுக்கான அலுவலகச் சட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. 2018 ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட அந்த சட்டத்தின் 27 வது பிரிவு தனிநபர்களும் குழுக்களும் நினைவேந்தலைச் செய்ய அனுமதிக்கிறது.

கொழும்பில் உள்ளவர்களுக்கு மாத்திரமல்ல கிராமப்புறங்களில் வாழ்பவர்களுக்கு நல்வாழ்வு வேண்டும் என்பதற்காக சமூகத்தை மாற்றுவதற்கு போராடிய தங்கள் தியாகிகளை ஜே.வி.பி. யினர் நீண்டகாலமாக நினைவுகூர்ந்து வருகிறார்கள். தங்களது உரிமைகளை வென்றெடுப்பதற்கான போராட்டத்தில் உயர்த்தியாகம் செய்தவர்களை நினைவு கூருவதற்கு தமிழ் மக்களுக்கு உரிமை இருக்கிறது என்பதை அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருக்கிறது.

போரில் உயிரிழந்த தங்களது இரு மகன்களை நினைவு கூருவதற்கு யாழ்ப்பாணம் கொடிகாமத்தில் அவர்களின் சடலங்கள் புதைக்கப்பட்டிருக்கும் (முன்பு மயானமாக இருந்த) இடத்துக்குச் சென்ற ரி. செல்லத்துரை என்பவரும் அவரது மனைவியும் இப்போது இராணுவ முகாம் ஒன்றில் இருப்பதாக செய்திகள் வெளியாகியிருக்கிறது. இராணுவ முகாமுக்கு எதிரே இருக்கும் தனியாருக்கு சொந்தமான சிறிய துண்டு நிலத்தில் அடையாளபூர்வமான ஒரு நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. "எமது மகன்களை நினைவு கூருவதற்கு நாம் விரும்புகிறோம். அதற்காக அவர்களுக்கு விருப்பமான உணவுடன் பிரார்த்தனை செய்வதற்காக வந்தோம்" என்று அந்த தம்பதியர் கூறி னார்கள்.

உயிரிழந்த வர்களை நினைவு கூரலாம் ஆனால் அவர்கள் சார்ந் திருந்த இயக்கத்தை நினை வுகூர முடியாது என்பதே இந்த சந்தர்ப்பத்தில் அரசாங்கத்தின் நிலைப் பாடாக இருக்கிறது.

யாழ்ப்பாணம் இணுவிலில் 29 வயது இளை ஞன் ஒருவன் இந்த வாரம் பயங்கரவாத தடைச்சட்டத் தின் கீழ் கைது செய்யப்பட் டதாக இன் னொரு செய்தி கூறியது. மாவீரர்தின நிகழ்வுகளின் போது சமூக ஊடகங்களில் தகவல்களை பகிர்ந்து கொண்டமை தொடர்பாகவே அந்த இளைஞன் பயங் கரவாத விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டிருக்கிறார்.



ஜே.வி.பி.யின் முன்னைய தலை வர்களின் படங் களை மறைக்காமல் விடுவதைப் போன்று எதிர்காலத் தில் விடு தலை புலிகளின் தலைவர்களின் படங்களையும் பொலி சார் மறைக்காமல் இருக்கக்கூடும்.

விடுதலை புலிகளை நினைவுகூருவதற்கு அனுமதித்ததாக அரசாங்கத்தை எதிரணி அரசியல்வாதிகள் கடுமையாக கண்டனம் செய்கிறார்கள். இனத்துவ தேசியவாத சக்திக்கு மீண்டும் புத்துயிர் கொடுக்கப்படக்கூடிய சாத்தியங்களை குறைத்து மதிப்பிட முடியாது.

வடக்கு, கிழக்கில் நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்துவதற்கு அரசாங்கத்தினால் அனுமதியளிக்கப்பட்டது ஒன்று புதியது அல்ல. முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமை வகித்த முன்னைய அரசாங்கங்களினால் இதே போன்ற அனுமதி வழங்கப்பட்டது. இனவாதமற்ற இலங்கை ஒன்றை உருவாக்குவதற்கான அந்த அணுகுமுறை பாராட்டப்பட வேண்டியதேயாகும்.

முன்னாள் ஜனாதிபதி இலங்கைச் சமுதாயப் போட்டித் தேசியவாதங்களினால் கிரமமாக திணறடிக்கப்பட்டு வந்திருக்கின்ற போதிலும் , அந்த சமுதாயத்தின் பல்லின -- பன்முகத்தன்மையை நீண்டகாலமாக பிரதிநிதித்துவம் செய்து வந்திருக்கிறார். இந்த சிந்தனைக்கு நெருக்கமானதாகவே பாரம்பரியமாக ஜே.வி.பி. இருந்து வந்திருக்கிறது. இதன் காரணத்தினாலேயே இன்றைய நேர்மறையான மாற்றத்துக்கான பெருமை பெருமளவுக்கு ஜனாதிபதி திசாநாயக்கவை சேருகிறது.

**முஸ்லிம் புறக்கணிப்பு**

ஆட்சிமுறையில் இனவாதமற்ற போக்கு கடைப்பிடிக்கப்படும் என்று அளித்த உறுதிமொழிக்கு இணங்க, தேசிய மக்கள் அரசாங்கம் அதன் முதலாவது அமைச்சரவையில் முஸ்லிம் ஒருவரைச் சேர்த்துக்கொள்ளாமல் விட்ட தவறை சீர்செய்வதற்கு இடையறாது முயற்சியை மேற்கொண்டு வருகிறது.

முதற்தடவையாக அரசாங்கத்தின் அதியுயர் மட்டத்தில் தீர்மானங்களை எடுக்கும் செயன்முறைகளில் இருந்து ஒதுக்கி வைக்கப்பட்டதை முஸ்லிம் சமுதாயம் காண்கிறது.

முஸ்லிமை ஒருவரை பிரதி சபாநாயகராகவும் இன்னொரு முஸ்லிமை பிரதியமைச்சராகவும் நியமித்ததன் மூலம் நிலைவரத்தை சீர்செய்வதற்கு அரசாங்கம் முயற்சித்திருக்கின்ற போதிலும் கூட, புறக்கணிக்கப்பட்டதனால் ஏற் பட்ட வேதனை உணர்வு முஸ்லிம் சமுதாயத்தை விசேடமாக அரசாங்கத்துக்கு வாக்களித்த கணிசமான எண்ணிக்கையான முஸ்லிம்களை தொடர்ந்து குழப்பத்தில் ஆழ்த்துகிறது.

ஆனால், கடந்த காலத்தில் பல முஸ்லிம் அமைச்சர்களைக் கொண்டிருந்த அரசாங்கங்கள் அதிகாரத்தில் இருந்த வேளைகளில் கூட, முஸ்லிம் சமுதாயத்துக்கு இழைக்கப்பட்ட பெரிய அநீதிகளை தடுக்க முடியவில்லை என்பதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டியது அவசியமாகிறது. குறிப்பாக, மூன்று தசாப்த கால உள்நாட்டுப் போரின் முடிவுக்கு பிறகு தேசியவாத குழுக்களின் பிரதான இலக்காக முஸ்லிம் சமுதாயம் இருந்து வந்திருக்கிறது.

முஸ்லிம்களுக்கு எதிரான பயங்கரமான கலவரங்களில் அவர்களின் உடைமைகள் சூறையாடப்பட்டு நிர்மூலம் செய்யப்பட்டதுடன் சிலர் கொல்லப்பட்ட அதேவேளை அந்த அட்டூழியங்களைச் செய்தவர்களுக்கு எதிராக எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அமைச்சரவையில் பல முஸ்லிம்கள் இருந்தும் அந்த அக்கிரமங்களை தடுக்க முடியவில்லை.

கடன்பொறி ஒன்றில் நாடு சிக்கிக் கொள்வதற்கு வெகு முன்னதாக, ஊழல் தலைவிரித்தாடும் நாடாக இலங்கை மாறுவதற்கு முன்னதாகவும் கூட, நாட்டின் ஐக்கிய உணர்வைச் சிதைத்த இனப் பிளவு ஒன்று இருந்தது. நாடு சுதந்திரம் பெற்ற கையோடு இந்திய வம்சாவளி தமிழர்களின் (மலையக தமிழர்கள்) குடியுரிமையும் அதன் வழியாக வாக்குரிமையும் பறிக்கப்பட்டு அவர்கள் அரசியல் சமுதாயத்தில் இருந்து விலக்கி வைக்கப்பட்டார்கள். அதை தொடர்ந்து தனிச் சிங்களக் கொள்கையின் மூலமாக சகல தமிழ்பேசும் மக்களினதும் சமத்துவமான மொழியுரிமைகள் மறுக்கப்பட்டன.

அதுவே இலங்கையின் குடிமக்களில் பெருமளவானவர்கள் நாட்டை விட்டு வெளியேற வழிவகுத்தது. அந்த நேரத்தில் மிகவும் படித்த சமூகத்தவர்களாக விளங்கிய பறங்கியர் சமூகம் வெளிநாடுகளுக்கு சென்றது.

இன்று நாட்டின் நாலாபுறங்களிலும் உள்ள மக்களும் மத்திய பகுதியில் உள்ள மக்களும் ஒரு மாற்றத்துக்காக, ஐக்கியத்துக்காக, ஒரு புதிய தொடக்கத்துக்காக வாக்களித்திருக்கிறார்கள். இது தேசிய மக்கள் சக்திக்கு கிடைத்திருக்கும் ஒப்பற்ற ஒரு வாய்ப்பாகும். வாக்குறுதிகள் காப்பாற்றப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழர்...

அவர் மேலும் தெரிவிக்கையில்-

யுத்தத்தின்போது உயிரிழந்த தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர்களையும் தங்கள் உயிர்களை இழந்த தமிழர்களையும் நினைவு கூருவதும் ஜே.வி.பியின் நினைவு கூரல்களும் ஒரேமாதிரியானவை. வித்தியாசங்கள் இருக்கமுடியாது.

இரண்டு ஆயுதப் போராட்டங்களும் அரசாங்கத்தினால் மௌனமாக்கப்பட்டன. இரண்டு ஆயுதப் போராட்டங்களும் நியாயபூர்வமானவை. மக்கள் ஏன் ஆயுதமேந்தவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டார்கள் என்பதற்கான நியாயபூர்வமான காரணங்கள் உள்ளன.

அங்கிருந்தே நாங்கள் வருகின்றோம், ஆனால் இந்த நியாயபூர்வமான பிரச்னைகளுக்கு தீர்வை காணாமல் ஒரு தரப்பை தடைகள் இன்றி செயற்படவும் நினைவு கூரல்களில் ஈடுபடவும் அனுமதிப்பதும்,ஏனைய தரப்பின் மீது சில கட்டுப்பாடுகளை விதிப்பதும் நியாயமான விடயம் என நான் கருதவில்லை.

நினைவேந்தல் தொடர்பான இந்த கட்டுப்பாடுகள் 2011ஆம் ஆண்டு சுற்றறிக்கையை அடிப்படையாக கொண்டவை.

உங்கள் அரசாங்கம் இனவாத அரசாங்கம் என குறிப்பிடும் அரசாங் கத்தின் காலத்திலேயே இந்த சுற்றிக்கை வெளியானது. அந்த அரசாங்கத்தின் காலத்தில் வெளியிடப்பட்ட நீங்கள் எப்படி நினைவு கூரல்களை முன்னெடுக்க முடியும் என தெரிவிக்கும் சுற்றறிக் கையை நீங்கள் நடைமுறைப்படுத்தும் போது அது முற்றாக நியாயமற்ற விடயம்.

இந்த தவறை திருத்திக்கொள்ளவேண்டும் என நான் இந்த அரசாங்கத்தை கேட்டுக்கொள்கின்றேன். பயங்கரவாத தடைச் சட்டத்தை வடக்கில் மாத்திரமல்ல தெற்கிலும் பயன்படுத்தக்கூடாது என நான் வேண்டுகோள் விடுக்கின்றேன். - என்றார். (அ)

## புதிய...

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவுக்கும் இலங்கை தமிழரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் நடை பெற்றது.

இதன்போது இலங்கை தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் நீண்ட காலமாக வடக்கு மற்றும் கிழக்கு மக்கள் முகம் கொடுத்து வரும் பிரச்னைகள் குறித்து ஜனாதிபதியிடம் விளக்கமளித்தனர்.

பாராளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், சாணக்கியன் ராசமாணிக்கம், பத்மநாதன் சத்தியலிங்கம், சண்முகநாதன் குகதாசன், ஞானமுத்து ஸ்ரீநேசன், கவீந்திரன் கோடீஸ்வரன், இளையதம்பி சிறிநாத், துரைராசா ரவிகரன் ஆகியோர் இதன்போது கலந்து கொண்டனர்.

இது குறித்து சிறீதரன் எம்.பி. தெரிவிக்கையில்-

இனப்பிரச்னைக்கான தீர்வு தொடர்பில் ஜனாதிபதியுடன் பேசினோம். சமஷ்டி அடிப்படையிலான தீர்வு தொடர்பில் புதிய அரசமைப்பு உருவாக்கத்தின்போதே கவனத்தில் கொள்ள முடியும் என அவர் எம்மிடம் குறிப்பிட்டார். மாகாண சபைத் தேர்தலை அடுத்த வருட இறுதிக்குள் நடத்த நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் எம்மிடம் உறுதியளித்தார். 13ஆவது திருத்தம் தொடர்பில் அவர் எம்மிடம் எதுவும் கூறவில்லை. உள்ளூராட்சித் தேர்தலை நீதிமன்ற உத்தரவின் படி நடத்த ஏற்பாடு செய்யப்படும் என அவர் குறிப்பிட்டார்.

காணாமற்போனோர் விடயத்தில் தம்மால் உடனடியாக எதுவும் செய்ய இயலாது என்றும் படிப்படியாக அந்த விடயத்துக்கு தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

தொல்பொருள் திணைக்களம், வனவள திணைக்களம் என்பவற்றின் செயற்பாடுகள் குறித்து தொடர்ந்து பேசுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

காணிகள் விடுவிப்பு தொடர்பிலும் கவனம் செலுத்தப்படும் என்றும் ஜனாதிபதி கூறினார் - என்றார். (அ)

## உக்ரைனில்...

அதேநேரம், இந்தியப் பெருங்கடல் பகுதியில் உள்ள டியாகோ கார்சியா தீவில் கடந்த 3 ஆண்டுகளுக்கு மேலாக நிர்க்கதிக்குள்ளாகியிருந்த புலம்பெயர்ந்தோர் பிரித்தானியாவிற்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளதாக வெளிவிவகார மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சர் அருண் ஹேமசந்திரா தெரிவித்தார். (அ)

## 13 ஒழிக்கப்படுமென...

மாறாக மாகாண சபை முறை எவ்வித கலந்துரை யாடல்களுமின்றி ஒழிக்கப்படும் என நான் ஒரு போதும் கூறவில்லை எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இலங்கையில் நடை முறையில் உள்ள அரச மைப்பின் 13ஆவது திருத் தச் சட்டத்தில் முன் மொழியப்பட்டுள்ள மாகாண சபை முறை மையை முடிவுக்குக் கொண்டு வரவும், புதிய அரசமைப்பின் ஊடாக அனைத்து இன மக்களுக்கும் சம மான உரிமைகள் கிடைப்பதை உறுதி செய் யவும் தேசிய மக்கள் சக்தி அரசு நடவடிக்கை எடுத்துள்ளது என அண்மை யில் அவர் தமிழ் ஊடக மொன்றுக்கு கருத்து வெளியிட்டிருந்ததாக சமூக ஊடகங்களில் செய் திகள் வெளியாகியிருந்தன.

இந்த செய்தியில், "தமிழ் மக்களின் அரசியல் பிரச்னைகளுக்கு தீர்வு ஏற்படுத்துவதாகக் கூறிய இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் ஊடாக 13ஆவது அரசமைப்பு திருத்தம் கொண்டுவரப்பட்டது.

அந்த ஒப்பந்தத்தை ஆரம்ப காலத்தில் இருந்தே நாங்கள் எதிர்த்து வந்துள்ளோம். நாட்டு மக்களின் விருப்பத்துக்கு மாறாகவும் அமைச்சரவையில் கூட அனுமதி பெறாமலுமே ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

இருப்பினும் அந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் அரசமைப்பின் ஊடாக நாட்டில் நடைமறைப்படுத்தப்பட்டுள்ள 13ஆவது திருத்தத்தின் அடிப்படையிலான மாகாண சபை முறைமையால் தமிழ் மக்களின் அரசியல் பிரச்னைகளுக்கு தீர்வு ஏற்படவில்லை. மாறாக இனங்களுக்கிடையில் முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் வகையிலான சூழலே காணப்படுகின்றது.

எனவே, பயனற்ற மாகாண சபை முறைமைக்குப் பதிலாக தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகள் நிறைவேறக் கூடியதும், அனைத்து இன மக்களுக்கும் சமமாக உரிமையைப் பெற்றக்கொள்ளும் வகையிலுமான புதிய அரசமைப்பை உருவாக்கும் பணியில் தேசிய மக்கள் சக்தி அரசு செயற்படுகின்றது.

புதிய அரசமைப்பின் ஊடாக தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் தீர்வு கிடைக்கும். அப்போது 13ஆவது அரசமைப்பு திருத்தமோ அல்லது மாகாண சபை முறைமைக்கான தேவையோ நாட்டில் இருக்காது." என ரில்வின் சில்வா கூறியதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள ரில்வின் சில்வா,

வடக்கு மக்களின் சிக்கல்களைத் தீர்த்துவைக்க 1987இல் கொண்டுவரப்பட்ட 13ஆவது திருத்தம் தவறியுள்ளது. அதனால் வடக்கு மக்களின் சிக்கல்களைத் தீர்த்து வைக்க மிகவும் நடைமுறைச்சாத்தியமானதும் சரியானதுமான தீர்வினை முன்வைக்க வேண்டியுள்ளது. அத்தகைய மிகச்சிறந்த தீர்வினை முன்வைத்து நடைமுறைப் படுத்தும்வரை 13ஆவது திருத்தத்தையும் மாகாண சபைகளையும் ஒழிக்கப்போவதில்லை என்றே நான் கூறினேன்.

மேற்படி புதிய தீர்வுகள் எதிர்காலத்தில் கலந்துரையாடலுக்கு இலக்காக்கப்படுகின்ற அரசியலமைப்பில் உள்ளடக்கப்படும். அந்த தீர்வு சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினர்களினதும் கருத்துக்கள் மற்றும் முன்மெழிவுகளை அடிப்படையாகக்கொண்டே தயாரிக்கப்படும். எனது செய்தி திரிபுபடுத்தப்பட்டுள்ளது - என்றார். (அ)

## தமிழ் அரசியல்...

நாட்டில் சமத்துவம் என்பது மிகவும் முக்கியமானது. அதனை நாங்கள் வரவேற்கின்றோம். ஆனாலும், ஜனாதிபதி அண்மையில் ஆற்றிய அக்கிராசன உரையில் தமிழ் மக்களுக்கு மட்டும் உரித்தான சில பிரச்னைகள் பற்றி பேசியிருக்கவில்லை.

வடக்கு - கிழக்கில் உள்ள தமிழ் மக்களின் பிரதான கட்சி என்ற அங்கிகாரம் இலங்கை தமிழரசு கட்சிக்கு மீண்டும் கிடைத்துள்ள நிலையில், இந்த விடயங்களை நான் கவனத்திற்கு கொண்டு வருகின்றேன்.

அந்த வகையில் பல அரசியல் கைதிகள் இன்னும் விடுவிக்கப்படாமல் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். ஒரு அரசியல் நோக்கத்திற்காக ஆயுதம் ஏந்தி போராடிய இந்த தமிழ் அரசியல் கைதிகள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

ஆரம்பத்தில் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட அவர்கள் மீது தற்போது பல்வேறு வழங்கு பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்தவிடயம் தொடர்பில் அரசாங்கம் உடனடி கவனம் செலுத்தவேண்டும்.

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை நீக்குவதாக கூறி ஆட்சிக்கு வந்துள்ள தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் தற்போது அந்தச் சட்டத்தை கையில் எடுத்துள்ளது.

இந்நிலையில், பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய அரசாங்கம் கவனமெடுக்க வேண்டும்.

அதேபோல் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதி கிடைக்க வேண்டும். இந்த விடயத்தில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுவது மட்டுமின்றி, குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும்.

உண்மை கண்டறியப்படுவதுடன், குற்றவாளிகள் தண்டிக்கப்படவேண்டும்.

காணி சம்பந்தமான பிரச்னைகள் தமிழ் மக்களுக்கு அதிகம் இருக்கின்றன. இந்த விடயத்தில் சமத்துவம் என்ற அடிப்படையில் சிங்கள மக்களுக்கு இல்லாத பிரச்னைகள் தமிழ் மக்களுக்கு இருக்கின்றன.

மேய்ச்சல் தரையுடன் தொடர்புடைய மகாவலி அதிகார சபையுடைய பிரச்னை வடக்கு - கிழக்கில் உள்ள எட்டு மாவட்டங்களிலும் உள்ளன. இந்த பிரச்சினை தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாட்டை நாங்கள் அறியவேண்டும்.

அதேபோல் தொல்பொருள் திணைக்களத்தால் இந்நாட்டில் சிங்கள மக்களுக்கு எவ்வித அச்சுறுத்தல்களும் இல்லை. ஆனால் தமிழ் மக்கள் தொடர்ச்சியாக தொல்பொருள் திணைக்களச் சட்டத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர். - என்றார். (அ)

## மதுபான

மதுபான அனுமதிப் பத்திரங்கள் 2024ஆம் ஆண்டில் வழங்கப்பட்டிருந்ததாக அரசாங்கம் தெரிவித்திருந்த நிலையில், கடந்த ஜனவரி மாதம் முதல் செப்ரெம்பர் மாதம் 21ஆம் திகதி வரை முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் வழங்கப்பட்ட மதுபான அனுமதிப்பத்திரங்கள் தொடர்பான தகவல்களை அமைச்சரும் சபை முதல்வருமான பிமல் ரத்நாயக்க நேற்று பாராளுமன்றத்தில் வெளியிட்டார்.

இக்காலப் பகுதியில் மொத்தமாக 362 அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இவற்றில் 172 அனுமதிப் பத்திரங்கள் எவ்.எல் 4 எனப்படும் சில்லறை மதுபான விற்பனை அனுமதிப் பத்திரங்களாகும்.

மேல் மாகாணத்துக்கு 110 மதுபான அனுமதிப் பத்திரங்களும், தென் மாகாணத்துக்கு 48, வடக்கு மாகாணத்துக்கு 32, கிழக்கு மாகாணத்துக்கு 22, மத்திய மாகாணத்துக்கு 45, வடமத்திய மாகாணத்துக்கு 14, வடமேல் மாகாணத்துக்கு 30, ஊவா மாகாணத்துக்கு 30, சப்ரகமுவ மாகாணத்துக்கு 30 என்ற அடிப்படையில் 331 மதுபான அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

எவ்.எல் 4 எனப்படும் சில்லறை மதுபான அனுமதிப் பத்திரங்கள் 172 அனுமதி பத்திரங்கள் இந்த காலப்பகுதியில் வழங்கப்பட்டுள்ளன.

சில்லறை மதுபான அனுமதிப் பத்திரங்களானது பின்வருமாறு வழங்கப்பட்டுள்ளன. அந்தவகையில், மாவட்ட ரீதியாக பார்க்கும் பொழுது

கொழும்பு 24, கம்பஹா 18, களுத்துறை 8, காலி 9, மாத்தறை 5, அம்பாந்தோட்டை 5, யாழ்ப்பாணம் 5, கிளிநொச்சி 16, வவுனியா 2, மன்னார் 2, திருகோணமலை 4, மட்டக்களப்பு 1, அம்பாறை 5, கண்டி 11, மாத்தளை 6, நுவரெலியா 8, அநுராதபுரம் 4, பொலனறுவை 3, புத்தளம் 6, குருணாகலை 8, பதுளை 9, மொனராகலை 7, இரத்தினபுரி 6 , கேகாலை 2 என்ற அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளன.

அந்தவகையில், முல்லைத்தீவு மாவட்டத்திற்கு எந்த விதமான மதுபான அனுமதிப்பத்திரங்களும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

இப் பட்டியலின் பிரகாரமே சில பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர்கள் சமீபத்தில் பேசுபொருளாக மாறியிருந்தன. அரசியல் இலஞ்சத்தின் போர்வையில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் இந்த அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இவற்றை பொதுமக்களும் அறியக் கூடிய வகையில் அதனை பாராளுமன்றத்தில் வெளியிடுவதாக பிமல் ரத்நாயக்க தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## வடக்கில்...

அசோக ரன்வெல்ல தலைமையில் கூடியது.அதன் பொது உரையாற் றிய போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசாங்கம் பெற்றுக்கொண்டுள்ள பெரும்பாண்மை மக்கள் ஆணையை உரியவாறு பயன்படுத்தும் பட்சத்தில் அதற்கான ஆதரவை வழங்க எதிர்கட்சியென்ற வகையில் நாம் தயாராகவுள்ளோம்.

225 பாராளுமன்ற உறுப்பினர்களையும் ஊழல்வாதிகள் என கூறினர். ஆகவே யார் அந்த ஊழல்வாதிகள் என்பதை மக்களுக்கு காண்பிக்க வேண்டும். நாட்டை கட்டியெழுப்ப பங்களிப்பை வழங்க எத்தனிப்பவர்களையும் ஊழல்வாதிகளாக சித்தரிக்க வேண்டாம் என தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

பாராளுமன்ற வரப்பிரசாதங்களை இரத்து செய்வோம் என கூறினர். இனவாத்தை ஒழிப்பதாக கூறினர்.ஆனால் அதற்கான கர்வுகள் முன்னெடுக்கப்பட்டதாக தெரியவில்லை. வடக்கில் ஒரு நீதியும் தெற்கில் ஒரு நீதியும் நடைமுறைப்படுத்தப்படுத்தப்படுகின்றது - என்றார். (அ)

## ராஜபக்ஷ...

நடைபெற்று வரும் விசாரணைகள் தொடர்பில் வாக்குமூலம் வழங்க குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு சென்ற போதே அவர் இதனைத் கூறியுள்ளார்.

அரசியல் தஞ்சம் பெற்று தற்போது அமெரிக்காவில் வசிக்கும் போத்தல ஜெயந்த, இதற்கு முன்னர் 2017 ஆம் ஆண்டு இலங்கைக்கு வந்து தம் மீதான தாக்குதல் தொடர்பான தகவல்களை வழங்கியிருந்தார்.

2009ஆம் ஆண்டு தம் மீது நடத்தப் பட்ட தாக்குதல் 2017ஆம் ஆண்டிலும் உரிய முறையில் விசாரிக்கப்படவில்லை என்று அவர் கூறினார்.

அத்துடன், நாட்டில் இடம்பெற்ற பல குற்றச் செயல்கள் தொடர்பான சாட்சியங்கள் அழிக்கப்படும் அபாயம் உள்ளதாகவும் அவர் வெளிப்படுத்தினார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## மாவீரர் நிகழ்வை பயன்படுத்தி தெற்கில் போலிப் பிரசாரங்கள்!

**சபையில் பொது பாதுகாப்பு அமைச்சர்**

கொழும்பு, டிசெ. 05

**வடக்கில் 244 கொண்டாட்டங்கள் இடம்பெற்றுள்ளதாகவும் அவற்றில் பத்தில் சில சின்னங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் அறிவித்துள்ளதாக பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால பாராளுமன்றத்தில் விடுத்துள்ள விசேட அறிக்கையில் தெரிவித்தார்.**

அது தொடர்பான சட்டத்தை பொலிஸார் அமுல்படுத்தியுள்ளதாகவும் பொது பாதுகாப்பு அமைச்சர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இன, மத பேதங்களை ஒதுக்கி வைத்துவிட்டு, வடக்கிலும் தெற்கிலும் உள்ள இலங்கையர்களுக்கு தேசிய ஒற்றுமைக்கான ஆணையை வழங்கியுள்ளோம்.

கடந்த சில நாட்களாக, மாவீரர் கொண்டாட்டங்கள் குறித்து சமூகத்தில் பல விவாதங்கள் நடைபெற்று வருகின்றன, இறந்த உறவினர்களை நினைவு கூர உரிமை உள்ளது என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம்.

ஆனால், விடுதலைப் புலிகள் அமைப்பு தடை செய்யப்பட்ட அமைப்பு என்பதால், அந்த அமைப்புக்கு சொந்தமான கொடிகளைக் காட்டிக் கொண்டாடுவதற்கு வாய்ப்பில்லை என நான் கூறிய கருத்தை திரித்து, தவறான அர்த்தம் கொடுக்கும் வகையில் வெளியிடப்பட்டது.

இது குறித்து குற்றப் புலனாய்வுப் பிரிவில் முறைப்பாடு அளித்துள்ளேன்.

வடக்கில் 244 கொண்டாட்டங்கள் இடம்பெற்றுள்ளதாகவும் அதில் பத்தில் சில சின்னங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

வடக்கில் நடத்தப்பட்ட கொண்டாட்டங்களின் அடிப்படையில், சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி பெரும் எண்ணிக்கையிலான திரிபுபடுத்தப்பட்ட பதில்கள் பரப்பப்பட்டன.

கடந்த ஆண்டுகளில் நடைபெற்ற விடுதலைப் புலிகளின் கொண்டாட்டங்களின் புகைப் படங்களைப் பயன்படுத்தி அவை வடக்கில் நடத்தப்பட்டவை என்பதை உறுதிப்படுத்தும் வகையில் வெளியிடப்பட்டது.

மேலும் அவ்வாறான புகைப் படங்களில் சில வெளிநாடுகளில் இடம்பெற்ற நிகழ்வுகளில் பிடிக்கப்பட்டவை.

தென்னிலங்கையில் சமூக ஊடகங்களை நடத்தும் ஒழுங்கமைக்கப்பட்ட குழு ஒன்று நாடுகளுக்கு இடையில் முரண்பாடுகளை உருவாக்கும் வகையில் இந்த போலிச் செய்தியை உருவாக்கியுள்ளது - என்றார். (அ)

## மாவீரர் நினைவேந்தல் பதிவுகள் கெலும் ஜெயசுமணவுக்கு பிணை!

கொழும்பு, டிசெ. 05

மாவீரர் தின நினைவேந்தல்கள் தொடர்பான பழைய காணொளிகளை சமூக வலைத்தளத்தில் பதிவிட்ட காரணத்தால் கைது செய்யப்பட்ட மூவரில், சமூக செயல்பாட்டாளரான கெலும் ஜெயசுமணவை பிணையில் விடுவிக்குமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்களில் மற்றுமொருவரான பத்தேகம பகுதியைச் சேர்ந்த நபரை டிசெம்பர் 17ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பத்தேகம நீதவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

கடந்த வருடங்களில் மாவீரர் தின நினைவேந்தல்களின்போது எடுக்கப்பட்ட பழைய காணொளிகளை இவ்வருட நினைவேந்தல் நிகழ்வுகள் எனக் கூறி முகநூல் சமூக வலைத்தளத்தில் பதிவிட்டு, பொதுமக்களுக்கு இடையூறு விளைவித்த குற்றத்தில் 3 பேர் கைது செய்யப்பட்டனர்.

மருதானை, சுன்னாகம் மற்றும் பத்தேகம பிரதேசங்களைச் சேர்ந்த 28, 35 மற்றும் 45 வயதுடையவர்களே கைது செய்யப்பட்டனர்.

இந்நிலையில், கைது செய்யப்பட்டவர்களில் பத்தேகமவைச் சேர்ந்த நபர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதோடு, சமூக செயற்பாட்டாளர் கெலும் ஜெயசுமண பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். (அ)

## கொழும்பு பல்கலை ஸ்ரீபாலி வளாகம் ஊடகக் கற்கைகள் பீடமாக மாற்றம்

கொழும்பு, டிசெ. 05

கொழும்பு பல்கலைக்கழகத்தின் ஸ்ரீபாலி வளாகத்தை அந்தப் பல்கலைக்கழகத்தின் ஊடக கற்கைகள் பீடமாக மாற்றுவதற்கான அதிவிசேட வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

கல்வி, விஞ்ஞான மற்றும் தொழிநுட்ப அமைச்சர் என்ற வகையில் பிரதமர் ஹரிணி அமரசூரியவால் இந்த அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

அத்துடன், மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தினை, பொதுச் சுகாதாரம் மற்றும் குடும்ப மருத்துவத் துறையாக மாற்றுவதற்கான அதிவிசேட வர்த்தமானியும் வெளியிடப்பட்டுள்ளது. (அ)

## பிரபாகரனின் படத்தை முகநூலில் பதிவிட்ட இளைஞனுக்குப் பிணை!

யாழ்ப்பாணம், டிசெ. 05

தடை செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவரது புகைப்படத்தை முகநூலில் பதிவிட்டதாக கைதான இளைஞருக்கு பிணை வழங்கி யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

பயங்கரவாத தடுப்பு பிரிவுப் பொலிஸாரால் அண்மையில் கைது செய்யப்பட்ட இணுவில் பகுதியைச் சேர்ந்த இளைஞன் நேற்று யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் முற்படுத்தப்பட்டார்.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் வழக்கு தாக்கல் செய்யப்பட்ட நிலையில் 72 மணி நேர விளக்கமறியலுக்குப் பின்னர் இளைஞன் நேற்று நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டபோது, இரண்டு இலட்சம் ரூபாய் பெறுமதியான சரீரப் பிணையில் நீதவான் விடுவித்ததுடன் வெளிநாட்டு பயணத் தடையும் விதித்து உத்தரவிட்டார். (அ)

## சுற்றுலாப் பயணிகளின் வருகையில் அதிகரிப்பு!

கொழும்பு, டிசெ. 05

இலங்கையின் சுற்றுலாத்துறை ஒரு முக்கிய மைல் கல்லை எட்டியுள்ளதாக சுற்றுலாத்துறையினர் தெரிவிக்கின்றனர்.

இதன்படி, இந்த வருடத்தின் முதல் 11 மாதங்களில் 1.8 மில்லியன் சுற்றுலாப் பயணிகளின் வருகை பதிவாகியுள்ளது.

அத்துடன், கடந்த நவம்பர் மாதத்தில் மொத்தமாக 184,158 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளனர்.

இது கடந்த ஜூலை மாதத்துக்குப் பிறகு மாதமொன்றில் பதிவான அதிக எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகளின் வருகையாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## கைதான 18 இந்திய மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை வேண்டும்!

**புதுச்சேரி முதலமைச்சர் எஸ்.ஜெய்சங்கருக்கு கடிதம்**

புதுடில்லி, டிசெ. 05

யாழ்ப்பாணம் - சுண்டிக்குளம் கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட 18 இந்திய மீனவர்களையும் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரி, புதுச்சேரி முதலமைச்சர் என்.ரங்கசாமி, இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

அத்துமீறி கடற்றொழிலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் குறித்த 18 இந்திய மீனவர்களும் இலங்கை கடற்படையினரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.

அதன்போது, மீன்பிடிப் படகொன்றும் கைப்பற்றப்பட்டுள்ளதாகக் கடற்படை பேச்சாளர் கப்டன் கயான் விக்ரமசூரிய தெரிவித்தார்.

பின்னர் குறித்த மீனவர்கள் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில் அவர்களை எதிர்வரும் 10ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்தநிலையில், குறித்த மீனவர்களை விடுவிப்பதற்காக இலங்கை அரசுடன் இணைந்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கரிடம் புதுச்சேரி முதலமைச்சர் என்.ரங்கசாமி கோரியுள்ளார்.

அதேநேரம் இந்த விடயத்தில் இந்திய வெளிவிவகார அமைச்சு உடனடியாக தலையீடு செய்ய வேண்டும் என, இந்திய பாராளுமன்ற உறுப்பினர் வி.வைத்தியலிங்கம் வலியுறுத்தியுள்ளார்.

இந்திய பாராளுமன்றில் இதனைக் குறிப்பிட்ட அவர், இது தொடர்பான கோரிக்கை கடிதம் ஒன்றையும் இந்திய வெளிவிவகார அமைச்சரிடம் சமர்ப்பித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ)

## லிட்ரோ எரிவாயு விலை திருத்தம் எதுவுமில்லை!

கொழும்பு, டிசெ. 05

மாதாந்த எரிவாயு விலை திருத்தத்திற்கமைய, டிசெம்பர் மாதத்தில், லிட்ரோ எரிவாயு விலையில் எந்த வித திருத்தமும் மேற்கொள்ளப்பட மாட்டாது என, லிட்ரோ எரிவாயு நிறுவனம் தெரிவித்துள்ளது.

12.5 கிலோ கிராம் நிறையுடைய எரிவாயுவின் விலை 3 ஆயிரத்து 690 ரூபாவாகவும், 5 கிலோ கிராம் நிறையுடைய எரிவாயுவின் விலை ஆயிரத்து 482 ரூபாவாகவும், 2.3 கிலோ கிராம் நிறையுடைய எரிவாயுவின் விலை 694 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படும் என, லிட்ரோ எரிவாயு நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, கடந்த நவம்பர் மாதமும், லிட்ரோ எரிவாயு விலையில் எந்தவித திருத்தமும் மேற்கொள்ளப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## நாணய நிதியத் திட்டங்களை அரசு தெளிவுபடுத்தவேண்டும்!

**நாமல் எம்.பி. கோரிக்கை**

கொழும்பு, டிசெ. 05

சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தம் தொடர்பிலான அரசாங்கத்தின் திட்டங்களை மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் கொள்கைப் பிரகடன உரை மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் இன்று கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தில் மாற்றங்களை கொண்டுவரப்போவதாக ஆளும் தரப்பினர் தேர்தல் மேடைகளில் உறுதியளித்தனர்.

ஆயினும் இந்த விடயத்தில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பாதையில் பயணிப்பதாகவே தெரிகிறது. ஏனென்றால் குறித்த ஒப்பந்தத்தில் எந்தவித மாற்றங்களும் ஏற்படுத்தப்படவில்லை.

தேசிய மக்கள் சக்தி சார்பில் தெரிவாகியுள்ள 159 பேரும் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க போன்று சிறந்த பேச்சாளர்களாக இருக்கலாம். ஆயினும் அவர்களின் செயற்பாடு குறித்து மக்கள் அவதானித்துக்கொண்டிருக்கிறார்கள்.

சர்வதேச நாணய நிதிய விடயத்தில் ரணில் விக்கிரமசிங்கவின் கொள்கையை அரசாங்கம் பின்பற்றுகிறதா என்ற கேள்வி எழுகிறது. ஆதலால் அரசாங்கம் இந்த விடயத்தை தெளிவுபடுத்த வேண்டும்-என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 05.12.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org